Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 72 | சனிக்கிழமை | தை 24 ஆம் நாள் 06 பெப்ரவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## எண்மருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், பெப்.6
வடக்கு மாகாணத்தில் நேற்று 8 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ் 19

# போராட்டத்துக்கு தடை விதிக்க நீதிமன்றங்கள் மறுப்பு

## எழுச்சியுடன் நகர்கின்றது பேரணி

யாழ்ப்பாணம், பெப்ரவரி 6
தமிழ்பேசும் மக்களை இலக்கு வைத்து இலங்கை அரசு மேற்கொண்டுவரும் அராஜகச் செயல்களைக் கண்டித்து பொத்துவிலில் இருந்து பொலிகண்டிவரை மேற்கொள்ளப்படும் போராட்டத்துக்குத் தடைவிதிக்க நீதிமன்றங்கள் மறுத்துள்ளன. போராட்டத்துக்குத் தடை விதிக்கக்கோரி வடக்கில் பொலிஸார் நீதிமன்றங்களில் தாக்கல் செய்த பல மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. 19



## எழுச்சியுடன் நகரும் பேரணி வவுனியாவை வந்தடைந்தது

யாழ்ப்பாணம், பெப்.6
தமிழ்பேசும் மக்களை இலக்கு வைத்து இலங்கை அரசு மேற்கொண்டுவரும் அராஜகச் செயல்களைக் கண்டித்து பொத்துவிலில் இருந்து பொலிகண்டிவரை மேற்கொள்ளப்படும் போராட்டம் நேற்று இரவு வவுனியா நகரை அடைந்தது. இன்று வவுனியாவில் இருந்து மன்னார் நோக்கி பேரணி நகரும். 19

உரிமைக்காய் குரல் கொடுப்போம்!
ஓரணியாய் அணி சேர்வோம்!




பொத்துவில் முதல் பொலிகண்டிவரை போராட்டத்தில்...
படம்: முகநூல்

## ஆணிகள், கற்களை வீசி தடை ஏற்படுத்த முயற்சி!

யாழ்ப்பாணம், பெப்.6
தமிழ்பேசும் மக்களை இலக்குவைத்து இலங்கை அரசு மேற்கொண்டுவரும் அராஜகச் செயல்களைக் கண்டித்து பொத்துவிலில் இருந்து பொலிகண்டி நோக்கி ஆரம்பிக்கப்பட்டுள்ள பேரணியைக் குழப்பும் நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பேரணியின் மூன்றாம் நாளான 19

## பருத்தித்துறையில் தடை!

யாழ்ப்பாணம், பெப்.6
பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் மற்றும் பேரணிகள் நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
தமிழ்பேசும் மக்களை இலக்கு வைத்து இலங்கை அரசு மேற்கொண்டுவரும் அராஜகச் செயல்களைக் கண்டித்து பொத்துவிலில் இருந்து ஆரம்பித்த பேரணி பொலிகண்டியில் முடியவுள்ள நிலையில், பொலிஸாரால் இந்தத் தடை உத்தரவு 19

## மக்களுக்கு தடுப்பூசிகள்; ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

*வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப்.6
வடக்கு மாகாணத்தில் பொதுமக்களுக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியான நிலையில் உள்ளன. தடுப்பூசிகள் கிடைத்ததும் மறுநாளே அவற்றைப் பொதுமக்களுக்கு ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுவிடும். 19

## 'ஏசி' பொருத்த யாழ்ப்பாணம் வந்த தென்பகுதி நபருக்குக் கொரோனா

*4 கடைகள் பூட்டு; 32 பேர் தனிமைப்படுத்தலில்*

யாழ்ப்பாணம், பெப். 6
புதிதாக அமைக்கப்படும் வங்கிக் கட்டடத்துக்கு வளிச்சீராக்கி (ஏசி) பொருத்துவதற்கு வந்த தென்னிலங்கையைச் சேர்ந்தவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது. அதனைய 18

## கொரோனாவைக் காட்டி ஒடுக்குகின்றது அரசு!

### மக்கள் பெரும் விசனம்

யாழ்ப்பாணம், பெப்.6
தமிழ் மக்களின் நியாயமான போராட்டங்களை ஒடுக்க அரசு கொரோனா தடுப்பு சட்டவிதிகளைப் பயன்படுத்துகின்றது என்று மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.
தமிழ்பேசும் மக்களை இலக்கு வைத்து இலங்கை அரசு மேற்கொண்டுவரும் அராஜகச் செயல்களைக் கண்டித்து பொத்து 18

## தாக்கப்பட்ட குடும்பஸ்தர் சிகிச்சை பயனின்றி சாவு

யாழ்ப்பாணம், பெப்.6
தாக்குதலுக்கு இலக்காகி, சிகிச்சை பெற்று வந்த குடும்பத்தலைவர் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம் ஆசீர்வாதப்பர் வீதியைச் சேர்ந்த சதாசிவம் நந்தகுமார் (வயது-48) என்பவரே உயிரிழந்துள்ளார்.
கடந்த 19

## அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் விலை குறைப்பு!

கொழும்பு, பெப்.6
அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் 19

# இந்திய கடன் 400 மில். செலுத்தப்பட வந்துகுதிக்கிறது சீனக்கடன் 1,500 மில்.

**கொழும்பு, பெப். 6**

**இந்திய மத்திய வங்கியிடம் அந்நிய செலாவணி சலுகையின் கீழ் இலங்கை பெற்றுக்கொண்ட 400 மில்லியன் டொலர் கடன் மீள செலுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, சீனாவிடம் கோரியுள்ள ஆயிரத்து 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் சலுகை இந்த மாதம் கிடைக்கும் என்றும் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல தெரிவித்தார்.**

கடந்த 2 ஆம் திகதி கடன் தவணை நிறைவடைந்துள்ள நிலையில், உரிய காலப்பகுதியில் கடன் திரும்பிச் செலுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது என அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

பரிவர்த்தனை நிதியிலிருந்து 400 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் சலுகையை இலங்கைக்கு வழங்குவதற்கு இந்தியா இணங்கியுள்ளது என்று கடந்த வருடம் ஜுலை மாதம் 25 ஆம் திகதி இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. இந்தக் கடன் சலுகை 2022 ஆம் ஆண்டு நவம்பர் வரை இருக்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிலையில், இந்த 400 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை மீளச் செலுத்தியுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி நேற்று அறிவித்தது.

400 மில்லியன் அமெரிக்க டொலரை செலுத்துவதற்கு மூன்று மாதங்கள் காலத்தை வழங்குமாறு ஜுலை மாதம் இலங்கை மத்திய வங்கி இந்தியாவின் இந்திய ரிசர்வ் வங்கியிடம் கோரிக்கை விடுத்திருந்தது என்று கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்தது. அந்த மூன்று மாதங்கள் காலம் இந்த மாதத்துடன் நிறைவு பெறுகின்றது என்றும் தூதரகம் தெரிவித்தது.

இதனை மேலும் நீடிப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் மட்டத்தில் இலங்கை இணக்கப்பாட்டுக்குச் செல்ல வேண்டும் எனவும் இதுவரை அவ்வாறான இணக்கப்பாடு எட்டப்படவில்லை என்றும் தூதரகம் மேலும் தெரிவித்தது. (த-இ)

# அவசியமற்ற சட்டங்களை நீக்கிவிடுவதற்குத் தயார்!

*நீதி அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, பெப். 6

ஒரு நாடு ஒரு சட்டம் என்ற வரையறை குறித்து அரசுக்குள் பேச்சு நடத்த வேண்டும் எனவும், முன்நோக்கிச் செல்லும்போது அவசியமற்ற சட்டங்கள் இருந்தால் அவற்றை நீக்கத் தயார் எனவும் நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொத்துரொட்டியைத் தயாரிப்பதுபோல் உடனடியாக புதிய அரசமைப்புச் சட்டத்தை கொண்டுவர முடியாது. இது குறித்து சமூக மட்டத்தில் விளக்கமளிக்க கலந்துரையாடல்களை ஏற்படுத்த வேண்டும். சகல இனங்களின் உதவியுடன் சிறந்த நாட்டை உருவாக்க அதனைச் சரியான முறையில் செய்யவேண்டும்.

புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க அனைத்துத் தரப்பினரின் ஆதரவும் அவசியம். சட்டத்தை மாத்திரமல்ல, அதனைச் செயற்படுத்துவதில் துரிதம், இலகு மற்றும் குறைந்த செலவு முறையும் அவசியம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

# அரசியல் கைதிகளின் விடுதலைக்கான தேசிய இயக்கம் பேரணிக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், பெப். 6

தமிழர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதோடு பல்வேறு விவகாரங்கள் தொடர்பிலும் நீதி வழங்குமாறு வலியுறுத்தி நடத்தப்பட்டுவரும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணிக்கு ஆதரவு வழங்குகின்றோம் என்று அரசியல் கைதிகளின் விடுதலைக்கான தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரை காலமும் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள அரசியல்கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி, நாமும் மேலும் பல சிவில் சமூக அமைப்புகளும் இணைந்து பல்வேறு விதமான போராட்டங்களை நடத்தியிருக்கிறோம்.

தற்போது இதற்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசியல்வாதிகளின் கைகளிலேயே உள்ளது.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் விரைவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி இலங்கைக்கான ஐ.நாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கரை சந்தித்து எமது பிரச்சினைகளை எடுத்துரைத்தோம்.

இலங்கையில் சர்வதேச நாடுகள் மற்றும் ஐ.நாவின் தூதரகங்கள் இயங்கிய காலப்பகுதியிலேயே இனவழிப்பு நடைபெற்றது என்பதையும் எனினும், இந்த விடயம் தொடர்பில் ஐ.நாவில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் திருப்திகரமான வையாக இல்லை என்றும் சுட்டிக்காட்டினோம்.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி பல தடவைகள் கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் கடிதங்களைக் கையளித்த போதிலும், எவ்வித பதிலும் வழங்கப்படவில்லை.

மாறாக இந்த விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்தும் அமைதிகாத்து வந்திருப்பதன் ஊடாக அவர்களும் ஆட்சியாளர்களுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றார்கள் என்பது தெளிவாகின்றது என்றும் ஹனா சிங்கரிடம் கூறினோம்.

இந்தநிலையில், எதிர்வரும் ஜெனிவா கூட்டத்தொடரின்போது தமிழர் விவகாரத்தில் அர்த்தமுள்ளதொரு மாற்றத்தை எதிர்பார்க்கின்றோம். - என்றார். (த-இ)

# குருந்தூர் மலையில் பௌத்தக் கோவிலாம்!

*கூறுகிறார் மத்திய கலாசார நிதிய பணிப்பாளர் நாயகம்*

முல்லைத்தீவு, பெப். 6

குருந்தூர் மலையில் உள்ள பௌத்த கோவிலைப் பாதுகாக்கும் உரிமை இலங்கை பௌத்தர்களுக்கும், இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் உரியது. அவர்கள் அனைவரும் இந்தப் பணியில் சமமாக உதவ வேண்டும் - பங்கேற்க வேண்டும் என்று மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் காமினி அதிகாரி தெரிவித்தார்.

தொல்பொருளியல் தொடர்பான பிரச்சினைகள் குறித்து அரசு தகவல் திணைக்கள கேட்போர்கூடத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொல்பொருளர் பணிப்பாளர் நாயகம் உள்பட்ட குழுவினர் அண்மையில் குருந்தூர் மலை கோவிலுக்குப் பயணம் செய்தனர். சில காலத்துக்கு முன்னர் அகழ்ந்த போது ஒரு பெரிய தூபி, சிலை, துறவிகள் தங்குவதற்கான வீடுகள் மற்றும் போதி மரங்கள் என பௌத்த கோவிலின் அனைத்து பண்புகளையும் கொண்ட இடமாக குருந்தூர் மலை கோவிலை அடையாளம் காணமுடிந்தது.

குருந்தூர் மலை பௌத்த கோவிலில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக வளர்ந்த காடுகள்,கட்டடங்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் அழிவடைந்துள்ளன. அவை முறையாக அகழப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.

இந்த இடத்தில் உள்ள கல்வெட்டுகள் இன்னும் வெளியிடப்படவில்லை. இந்தக் கோவில் நாட்டின் அனுராதபுர கால கோவில்களுடன் இணைக்கப்பட்டிருந்தது என்பது அந்தக் கல்வெட்டுகள் வாயிலாக தெரியவந்துள்ளது.

இது பெரிய மன்னர்களின் உதவியுடன் அவ்வப்போது பாதுகாக்கப்பட்ட ஓர் இடம் என்பதும் மிகத்தெளிவாக உள்ளது. இந்த இடத்தில் அகழ்வாய்வு செய்வது மிகவும் முக்கியம். இந்த இடத்துக்குச் சென்றபோது, இது தமிழ் குழுவோடு தொடர்புடைய கோவில் என்று ஏராளமானோர் நினைத்தனர்.

ஆனால் இந்த இடத்தில் ஒரு கோவில் தொடர்பான எதையும் நாங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

பௌத்த தொல்பொருள்கள் மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளன. பின்னர் தமிழ் மக்கள் இந்த இடத்துக்குச் சென்று தங்களின் திரிசூலத்தை அமைத்து வழிபட்டனர்.

இது தற்காலிகமாகச் செய்யப்பட்டது என்பது தெளிவாகிறது - என்றார் அவர். (த-இ)

# தாக்குதல்களுக்கு அஞ்சப்போவதில்லை

## வாகனம் மீதான தாக்குதல் பற்றி சிவாஜிலிங்கம் கர்ச்சிப்பு

யாழ்ப்பாணம், பெப். 6

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை நடைபெறுகின்ற பேரணியைக் குழப்புவதற்கு யார் எத்தகைய தாக்குதலை நடத்தினாலும், நாம் அஞ்சப்போவதில்லை என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை நடைபெறுகின்ற பேரணி மூன்றாவது நாளாக நேற்று நடைபெற்று வருகின்றது.

இந்தநிலையில் எம்.கே.சிவாஜிலிங்கம் பயணித்த வாகனம் மீது திருகோணமலை மடத்தடிச் சந்தியில் வைத்து, தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தவிடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக எம்.கே.சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்ததாவது:

தாக்குதல் நடத்தியவர்களின் கைகளில் பெற்றோல் போத்தல்களை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. பொலிஸாரும் பாதுகாப்புப் பணிகளில் இருந்த வேளையில்தான், இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

எனினும், விழ விழ எழுவோம், வீறுகொண்டு எழுவோம் என்றதன் அடிப்படையிலேயே நாங்கள் இந்தப் பயணத்தைத் தொடர்வோம். இத்தகைய தாக்குதலுக்கு நாங்கள் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை. இந்தப் பேரணியை நடத்துவதற்கு எத்தகைய தடைகள் வந்தாலும் அதனை முறியடித்து பொலிகண்டி வரை நிச்சயம் முன்னேறி செல்வோம் - என்றார். (த-இ)

# இ.போ.ச. ஊழியர்களின் விடுமுறைகள் ரத்து

கொழும்பு, பெப். 6

உடன் நடைமுறைக்கு வரும்வகையில் இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களின் விடுமுறை மறு அறிவித்தல் வரை ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் திங்கட்கிழமை தனியார் பேருந்து நடத்துநர்கள் வேலைநிறுத்தம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர் என்று கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

# குடிகாரர்களுக்கு தடுப்பூசி வழங்காதீர்

கொழும்பு, பெப். 6

மதுபானம் மற்றும் சிகரெட் பாவனையாளர்களின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாகக் காணப்படுகின்றமையால், அவ்வாறானவர்களுக்கு கோவிட் தடுப்பூசி வழங்குவதைத் தவிருங்கள் என்று சிகரெட் மற்றும் மதுசாரம் தொடர்பிலான தேசிய அதிகார சபையின் தலைவர் கலாநிதி சமாதி ராஜபக்ச தெரிவிக்கின்றார்.

மதுபானம் மற்றும் சிகரெட் பாவனையாளர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டால், அந்தத் தினத்திலிருந்து குறைந்தது 6 மாதங்களாவது அவற்றைப் பயன்படுத்தாது இருக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-இ)

# உரிமைப் போராட்டத்துக்கு நாம் தமிழர் கட்சி ஆதரவு

சென்னை,பெப்.6

**தமிழர்களுக்கு நீதி வேண்டி, முன்னெடுக்கப்பட்டுள்ள பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டத்துக்கு நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் ஆதரவு தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

"ஈழத்தில் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட இன அழிப்புப் போரில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைக் கேட்டு கிளிநொச்சியில் நடைபெற்றுவரும் பட்டினிப் போராட்டமும், பொத்துவிலில் தொடங்கியிருக்கும் நடைபயணமும் நம்பிக்கையைத் தருகிறன.

பேரினவாத ஆட்சியாளர்களின் கோர அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் நெஞ்சுரத்தோடு போராட்டத்தை முன்னெடுத்திருக்கும் ஈழச் சொந்தங்களைப் பெரிதும் போற்றுகிறேன்.

தாயக விடுதலைக்காகவும், தங்களது மண்ணுரிமைக்காகவும் போராடிய தமிழ் மக்கள்மீது, இனவெறியும், இனத்துவேசமும் கொண்டு, பல்வேறு அடக்குமுறைகளை ஏவி, அரச பயங்கரவாதத்தின் மூலமும், உள்நாட்டுப் போர் மூலமும் இரண்டு லட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த இனப் படுகொலை நிகழ்ந்து பத்தாண்டுகளாகியும் அதுகுறித்து எவ்விதப் பன்னாட்டு விசாரணையும் நடத்தப்படாத நிலையில், அதற்கான நீதியைக் கேட்டு நிற்கிறோம். அனைத்துலக நாடுகளும் கைவிட்ட கையறு நிலையிலும் சர்வதேச சமூகத்திடம் மன்றாடி வருகிறோம்.

தமிழர்களின் போராட்டங்களுக்குச் செவிசாய்க்காத இலங்கை அரசு, இன அழிப்பு நடவடிக்கைகளை இன்னும் தீவிரப்படுத்தியுள்ளதை அண்மைக்காலமாக ஈழத்தில் நடைபெறும் நிகழ்வுகள் நமக்கு உணர்த்துகின்றன.

இந்த நிலையில், எத்தகைய அடக்கு முறைகளை ஏவினாலும், இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், தமிழர்களின் உரிமைப் போராட்டம் தமக்கான நீதியைப் பெறும்வரை ஒருநாளும் ஓயப்போவதில்லை என்பதை உணர்த்தும்விதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் தற்போதையப் போராட்டங்கள், சிங்கள ஆட்சியாளர்களைக் கலக்கத்துக்குள் ஆழ்த்தியிருக்கிறது. இந்த நீதிக்கான போராட்டத்தை முழுமையாக ஆதரிக்கின்றேன். -என்றுள்ளது.

(க-இ)

## நீதிக்கான போராட்டத்துக்கு ம. ம. முன்னணியும் ஆதரவு

### அதன் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, பெப்.6

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான உரிமைப் போராட்டத்துக்கு மலையக மக்கள் முன்னணியும் முழு ஆதரவை வழங்குகிறது என்று முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மலையகப் பெருந் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்குமாறு வலியுறுத்தி மலையகம் தழுவிய ரீதியில் நடைபெறும் அடையாள வேலை நிறுத்த போராட்டத்துக்கு மலையக தொழிலாளர் முன்னணி ஏற்கனவே தமது ஆதரவை வெளியிட்டுள்ளது. வடக்கு, கிழக்கில் பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான உரிமைப் போராட்டத்துக்கும் மலையக மக்கள் முன்னணி முழு ஆதரவை வழங்குகின்றது. இது தொடர்பில் மாவை சேனாதிராசாவுடன் கலந்துரையாடினோம். அவர்களும் எமது சம்பள உயர்வுப் போராட்டத்துக்கு ஆதரவை வழங்கியுள்ளனர். வடக்கு, கிழக்கில் இன்று காணிகள் அபகரிக்கப் படுகின்றன. தொல்லியல் ஆய்வு என்ற போர்வையில் ஆக்கிரமிப்புகள் நடைபெறுகின்றன. இவை நிறுத்தப்பட வேண்டும். அதற்காக தமிழ்க்கட்சிகள் முன்னெடுக்கும் நடவடிக்கைக்கும் ஒத்துழைப்பு வழங்கப்படும் -என்றார்.

(ப)

## போராட்டத்துக்கு ஆதரவு கோரி தென்மராட்சியில் விழிப்புணர்வு

கொடிகாமம்,பெப்.6

பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரையான போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு கோரி, கொடிகாமம் மற்றும் சாவகச்சேரி நகர் பகுதிகளில் நேற்று விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.


வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன், திருமதி. சசிகலா ரவிராஜ் (தமிழரசுக் கட்சி), சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களான சி.சிவநேசன், க.அசோகலிங்கம், சாவகச்சேரி நகரசபை தவிசாளர் திருமதி. சிவமங்கை இராமநாதன், உபதவிசாளர் அ.பாலமயூரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு பேரணியின் முக்கியத்துவத்தை மக்களுக்குத் தெளிவுபடுத்தினர்.

கொடிகாமம் மற்றும் சாவகச்சேரி சந்தை வளாகத்தில் தேங்காய் விற்பனை மற்றும் மரக்கறிகள் விற்பனை செய்யும் இடங்களில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

உரிமை மறுப்பு மற்றும் நில ஆக்கிரமிப்பு பல்வேறு வகையான இன ஒடுக்கு முறைகளுக்கு எதிராக இடம்பெறும் பேரணிக்கு, தென்மராட்சி மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

(க-159)

## பேரணிக்கு ஆதரவாக மன்னாரில் சுவரொட்டி




மன்னார்,பெப்.6

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான, உரிமைக்கான பேரணிக்கு ஆதரவு தெரிவித்து, மன்னாரில் பல இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தமிழர்களின் நிலங்கள் அபகரிப்பு, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, இஸ்லாமியர்களின் உடல் தகனம் போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை பெரும் பேரணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின் பல தடைகளைத் தாண்டி பேரணி நகர்ந்து கொண்டிருக்கிறது.

இதற்கு தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவு அதிகரித்துள்ளது. மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து சுவரெர்ட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

உரிமை மீட்புப் பேரணிக்கு இன, மத பேதமில்லாமல் அனைத்து மக்களும் ஆதரவு வழங்குவோம் என்று மன்னார் மாவட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

(க-213)

## பொத்துவில் – பொலிகண்டி போராட்டம் தடைகளைத் தாண்டி யாழ். வந்தடையும்

### சுகாஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.6

தமிழ் இனத்தின் உரிமைக்கான போராட்டத்தை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்தார்.

பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரையான அகிம்சைப் போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தமிழ் ,முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழ் மக்கள் என இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்களை இந்த அரசு பிரித்தாளும் தந்திரோபாய முறையில் அவர்களுக்கு எதிராக இன ரீதியாகவும் மத ரீதியாகவும் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிராக தொல்பொருள் திணைக்களம் மூலம் தமிழர்களின் வரலாறுகளை அழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதுடன் வரலாறுகளைத் திட்டமிட்டு திரிபுபடுத்தி வருகின்றனர். தமிழ் இனத்துக்கு எதிராக இடம்பெற்ற இறுதிப் போரில் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை மற்றும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் இந்த அரசு பொறுப்புக் கூற வேண்டும். அதற்காகவே பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரையில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த அகிம்சைப் போராட்டமானது இலங்கை அரசின் அடக்குமுறைகளையும் தாண்டி யாழ்ப்பாணத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இலங்கையில் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய இணைந்த நாட்டுக்குள் வடக்கு கிழக்கு தனியலகாகப் பிரகடனம் செய்யும் வரை எமது பிரச்சினைகள் தீரப்போவதுமில்லை எமது போராட்டம் ஓயப்போவதும் இல்லை -என்றார்.

(ப-75)

## விவசாயிகளுக்கு விசேட கூட்டம்

சாவகச்சேரி,பெப்.6

மிருசுவில் - உசன் வெளிப் பகுதியில் புரேவிப்புயல் மற்றும் பெருமழையால் வயல்களில் நிறைந்து காணப்படும் வெள்ள நீரை அகற்றுவது தொடர்பான கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உசன் கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் இடம்பெறும்.

உசன் கமக்கார அமைப்புக்கு உட்பட்ட அனைத்து விவசாயிகளையும் இதில் பங்குபற்றுமாறு அமைப்பின் தலைவர் கு.விமலதாஸ் கேட்டுள்ளார்.

(க-9)

# நாட்டில் ராணுவ ஆட்சிக்கு முடிவுகட்டப்பட வேண்டும்

## தமிழ் மக்களுக்கு நீதி வேண்டும் என்கிறார் சம்பந்தன்

**கொழும்பு, பெப். 6**

**"இலங்கையில் தற்போது ஜனநாயக ஆட்சி இல்லை. இராணுவ ஆட்சியை நோக்கியே நாடு செல்கின்றது. இதற்கு உடன் முடிவு கட்டப்பட்டு தமிழ்பேசும் மக்களுக்கு நீதி கிடைக்க போராட வேண்டும் " என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.**



பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான நீதிக்கான போராட்டம் நேற்றுமுன்தினம் இரவு திருகோணமலை நகரை வந்தடைந்தது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: "தமிழ்பேசும் மக்கள் மீதான அரசின் அடக்குமுறைகளைக் கண்டித்தும், தமிழின அழிப்புக்கு எதிராகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேசத்திடம் நீதி கோரியும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை நடைபெறும் இந்தப் போராட்டப் பேரணியில் பங்கேற்றுள்ள அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இன்று இராணுவ மயமாக்கல் மற்றும் பௌத்த மயமாக்கல் தலைவிரித்தாடுகின்றது. நாட்டில் இன்று ஜனநாயக ஆட்சி இல்லை. இராணுவ ஆட்சியை நோக்கியே நாடு செல்கின்றது. இதற்கு உடன் முடிவு கட்டப்பட வேண்டும். தமிழ் பேசும் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும்.

இதை நாட்டின் தலைவர்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். இந்தப் போராட்டம் முடிவு அல்ல. இது ஆரம்பப் போராட்டமே. எமது இலக்கை அடையும் வரை உரிமைக்கான எமது போராட்டம் தொடரும்" - என்றார். (ஐ-22)

## அதிபர் பதவி வெற்றிடங்களை விரைவாக நிரப்ப நடவடிக்கை

கொழும்பு, பெப்.6

நாட்டின் 170 தேசியப் பாடசாலைகளில் காணப்படும் அதிபர் பதவிக்கான வெற்றிடங்களை விரைவாக நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. அதற்கான நேர்முக பரீட்சை கள் தற்போது நிறைவடைந்துள்ளன என அமைச்சின் செயலாளர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளை அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், வெற்றிடமாக இருந்த 100 தேசிய பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டினார். (வ-இ)

## இலங்கை மீது பிரேரணை பிரிட்டனிடம் வலியுறுத்து!

லண்டன், பெப்.6

ஐக்கிய நாடுகள் சபையின் 46ஆவது மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பாக பிரேரணை கொண்டுவருவதில் பிரிட்டன் முன்னின்று செயற்பட வேண்டும் என்று பிரிட்டனில் உள்ள 514 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் ஒன்றிணைந்து இரண்டாவது தடவையாகக் கோரிக்கையை முன்வைத்துள்ளன.

கடந்த ஜனவரி மாதம் 250 அமைப்புக்கள் இணைந்து இவ்வாறான கோரிக்கையை முன்வைத்திருந்தன. தற்போது மீண்டும் அந்தக் கோரிக்கையை உள்ளடக்கி 500க்கும் மேற்பட்ட அமைப்புக்கள் ஒன்றிணைந்து கோரிக்கை விடுத்துள்ள்ன.

பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் டொமின் ரப் எம்.பி தென்னாசியா மற்றும் பொதுநலவாய நாடுகளுக்கான அமைச்சர் அஹமட் ஆகியோருக்கு எழுதப்பட்ட கடித பிரதிகள் பிரிட்டன் பிரதமருக்கும் பிரதியிடப்பட்டுள்ளன.

அதேவேளை, சுமார் 20க்கும் மேற்பட்ட தமிழர் அல்லாத சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் இந்தக் கோரிக்கைக்கு ஆதரவு வழங்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## நாடு திரும்ப முடியாமல் அவதியுறும் பணிப்பெண்கள்

கொழும்பு,பெப்.6

அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொடுக்கும் பணிப்பெண்கள் இலங்கை திரும்ப முடியாமல் வெளிநாடுகளில் அவதிப்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் அகதியைப் போன்று வெளிநாட்டு தூதரகங்களுக்கு முன்னால் காத்து இருக்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குவைத்துக்கான இலங்கைத் தூதரகம் இவர்களைக் கண்டுகொள்ளாது, கைவிட்டுள்ளது என்ற குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. (ஐ-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு
20 . 05 . 1943



இறப்பு
05 . 02 . 2021

### சுந்தரம் சண்முகலிங்கம்

கச்சேரி நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும், இல. 09, 2ம் ஒழுங்கை, பலாலி வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் சண்முகலிங்கம் நேற்று (05.02.2021) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான சுந்தரம் கமலம்மாவின் அன்பு மகனும், தவமணிதேவி, சோமலிங்கம் (ஜேர்மனி), கணேசலிங்கம், பஞ்சலிங்கம், அமரர் அமுதலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சீதாலட்சுமியின் அன்புக் கணவரும், கேதீஸ்வரி (அபிவிருத்தி உத்தியோகத்தர்- கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், யாழ்ப்பாணம்), கிருஷ்ணரூபி (லண்டன்), ஜெயசீலன், ஜெயபாலன், ஜெயகாந்தன், கிருஸ்ணவேணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமரர் கலாநிதி யோகராசன், கேதீஸ்வரன் (லண்டன்), அமரர் கவிதா, ஜெயசுதா, மோகனாம்பிகை (குடும்பநல உத்தியோகத்தர், கோப்பாய்), உதயசங்கர் (அபிவிருத்தி உத்தியோகத்தர் கரு துறைப்பற்று பிரதேச செயலகம், முல்லைத்தீவு) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுபாங்கி, பிரஜித், பவித்திரன், துவிஷன், அபினகா, அக்ஷயன், ஜெய்ஜெனனி, அனுஶ்ரீ, அக்ஷாயினி, அக்ஷதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 09, 2ம் ஒழுங்கை,**
**பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**
**076 524 4897, 077 388 9401**

## மரண அறிவித்தல்



### திருமதி கந்தசாமி பவானி

அரியாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவம் கொண்ட திருமதி கந்தசாமி பவானி அவர்கள் நேற்று (05.02.2021) வெள்ளிக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் கந்தையா யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபை அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கந்தசாமியின் (இளைப்பாறிய கட்டட திணைக்கள பட வரைஞர்) பாசமிகு மனைவியும், சயந்தன் (ஆசிரியர், வேம்படி மகளிர் கல்லூரி), கௌரி (நடன ஆசிரியர் - லண்டன்), பிருந்தா (ஆசிரியர் நாவற்குழி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிருந்தாமலர் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்-யாழ்ப்பாணம்), ஜனார்த்தனன் (லண்டன்), உமாசெல்வன் (விரிவுரையாளர்-SLIIT) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற தவராசா, சரோஜாதேவி, சிவராசா யோகராணி, சாந்தினி, திரிலோஜினி, ஆனந்தராசா, அருலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தவமணி, லோகஞாதன், புஸ்பாதேவி, குணரட்ணம், குணபாலசிங்கம், சூரியகுமார், சுபதா, சண்முகலிங்கம், வரதராசா, சிவபாலசிங்கம், நாகேந்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், அபிராமி, மீனாட்சி, ஶ்ரீகரி, ஹனுஸ்தரி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நாளை (07.02.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**40/1, கலைமகள் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 221 1225, 077 8301 687**

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஒருமித்த உரிமைக்குரல் முடிவிலியாகட்டும்.!

இலங்கையில் தமிழ், முஸ்லிம் சிறுபான்மை மக்களுக்கிடையேயான கருத்தியல் ரீதியான ஒருமைப்பாட்டுப் புரிந்துணர்வானது இப்போது மீளுயிர்ப்புக் கொண்டுள்ளது. இது எந்தவகையிலும் தவிர்க்க முடியாத புத்தெழுச்சியாக அமைந்துவிடுமோ என்ற அச்சத்தை சிங்கள, பௌத்த பேரினவாதச் சக்திகளின் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றது. பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டப் பேரணியில் நடந்த நிகழ்வுகள் அதை வெளிப்படுத்துகின்றன.

தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையேயான நான்கு தசாப்த காலப் புரிந்துணர்வின்மையின் அடிப்படையிலான அரசியல்சார் விரோத மனப்பான்மையானது தற்போது விலகத் தொடங்கியிருக்கின்றது. தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கும் வாழ்வுரிமைக்குமான போராட்டம், ஆயுதப் போராட்டமாகப் பரிமாணம் பெற்றிருந்த காலத்தில் முஸ்லிம் மக்கள் தாங்களும் இந்த நாட்டில் சிறுபான்மை இனத்தவர் என்பதை மறந்திருந்தனர். வெறுமனே அற்ப அரசியல் சலுகைகளைப் பெற்றுக்கொண்டு பௌத்த சிங்கள அடிப்படைவாதிகளுடன் கைகோர்த்து அதிகார வர்க்கத்தினரின் செயற்பாடுகளுக்கெல்லாம் 'ஆமாம்' போடுபவர்களாக இருந்தனர்.

அதனால் தமக்கு ஏற்பட்ட அசம்பாவிதங்களும், அவநம்பிக்கைகளும் "தங்களது தொலைநோக்கு சிந்தனைக் குறைபாட்டால் ஏற்பட்டவையே" என்பதை அவர்கள் தற்போது புரிந்துகொள்ள ஆரம்பித்திருக்கின்றனர்.

அந்தப் புரிந்துணர்வைப் பெற ஏற்பட்ட காலதாமதம் முஸ்லிம் மக்களை எந்தளவு பாதித்துள்ளது என்பதைப் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான பேரணியில் அவர்கள் உள்ளுணர்வோடு இணைந்து தமது ஆதரவைத் தெரிவிப்பதன் மூலம் அறியமுடிகிறது. பழையதை இரைமீட்டல் என்பது அநாவசியமானது, அர்த்தமற்றது என்று சொன்னாலும் அனுபவம் கற்றுத்தரும் சில பாடங்கள் தவிர்க்கவே முடியாதவை.

போருக்குப் பின்னர் பலவகையிலும் சின்னாபின்னப்பட்டு அந்தரித்த நிலையில் வாழும் சிறுபான்மையினத்தவர்கள் மீதான நெருக்குவாரத்தை அதிகரிக்கவும், அதிகார பலத்தைப் பிரயோகித்து அவர்களின் உரிமைசார் விடயங்களில் அத்துமீறித் தலையீடு செய்யவும் பௌத்த சிங்கள பேரினவாதிகள் மூர்க்கம் கொண்டுள்ளனர். அதனையே தற்போதுள்ள சூழ்நிலைகள் அறிக்கை யிடுகின்றன.

பௌத்த சிங்கள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு என்ற கோதாவில், எந்தளவுக்குச் சிறுபான்மை இனத்தவரின் தனித்துவ அடையாளங்களை இல்லாதொழிக்க முடியுமோ அவற்றையெல்லாம் செய்து முடிக்கத் தீவிரம் காட்டும் அரசாங்கத்தின் முனைப்பை ஒரு வரலாற்று திருப்பத்துக்கான காலத்தேவையாகவே உணரலாம்.

"ஒரு இனத்தை அழிக்க வேண்டுமாயின் அந்த இனத்தின் கலாசார அடையாளங்களை இல்லாதொழித்து விட்டால் போதும்" என்ற சித்தாந்தத்தையே பௌத்த சிங்கள அடிப்படைவாத அதிகாரவர்க்கம் இறுக்கமாகக் கடைப்பிடிக்கிறது. அதையே இன்றைய ஆட்சியாளர்களின் சிறுபான்மை இனத்தவருக்கெதிரான நன்கு திட்டமிட்ட நிகழ்ச்சிநிரல் செயற்பாடுகள் உறுதிசெய்கின்றன.


இந்தநிலையில், ஒட்டுமொத்த சிறுபான்மையினத்தவரின் ஒருமைப்பாடும் பரஸ்பர நல்லுறவும் புரிந்துணர்வுடன்கூடிய வெளிப்படையான கருத்தியல் நெறிப்படுத்தலும் பொத்துவிலில் தொடங்கி பொலிகண்டியில் முடியும் ஒரு பேரணி நிகழ்வுடன் மட்டும் முற்றுப்பெற்றுவிடக்கூடாது.

தமிழினத்தவர்கள், அவர்கள் இஸ்லாமியர்களாக இருந்தாலும் இந்துக்களாக இருந்தாலும் கிறிஸ்தவர்களாக இருந்தாலும் ஏன் அவர்கள் மலையகத்தில் வாழ்ந்தாலும்- பெரும்பான்மை இனத்தவரைப் பொறுத்தவரை இந்த நாட்டின் சிறுபான்மை இனத்தவர் என்ற அடையாளத்தையே சுமப்பவர்களாக உள்ளனர்.

அதை உணரத்தவறின் விரைவிலேயே இந்த நாட்டைப் பேரினவாதிகள் முற்றுமுழுதாக சிங்கள பௌத்த நாடாக பிரகடனம் செய்துவிடுவார்கள் என்பது சர்வநிச்சயம். ஏன்? இப்போதுகூட இது பௌத்த சிங்கள சமதர்மக் குடியரசு என்றே கூறப்படுகிறது. எதிர்காலத்தில் வெறுமனே பௌத்த சிங்களக் குடியரசு என்ற பெயரோடு சிறுபான்மை இனம் இல்லாத ஒரு நாடாக மாற்றப்படும் அபாயத்தை அனுமதிக்கக் கூடாது.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரைக்கும் ஒலிக்கும் ஒருமைப்பாட்டுணர்வுடன் கூடிய உண்மைக்குரல் தொடர்ந்து, முடிவிலியாக ஒலிக்க வேண்டியது மிக மிக அவசியம். அது காலத்தேவையும் கூட.

### இன்றைய கருத்தோவியம்



நன்றி - அவந்த ஆட்டிகல

# அனைத்தையும் மறந்து பொதுமன்னிப்பு வழங்குக!

## கூறுகிறார் ஐ.ம.சக்தியின் சம்பிக்க எம்.பி

**கொழும்பு, பெப்.6**



**போர்க்காலம் பற்றி தற்போது கதைப்பது பயன் இல்லை. எல்லாவற்றையும் மறந்து, அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கி முன்னோக்கிப் பயணிக்கவே முயற்சிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது,

போர்க்காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் கவனம் செலுத்தாது அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கிவிட்டு முன்நோக்கிப் பயணிக்க வேண்டும்.

இலங்கையில் பிரிவினைவாதப் போர் ஏற்பட்டிருந்தது. சுதந்திரமாக செயற்படக்கூடிய சூழ்நிலை இருக்கவில்லை. தெற்கிலும், வடக்கிலும் அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டனர். அப்பாவி மக்கள் இலக்கு வைக்கப்பட்டனர். வடக்கிலிருந்து சிங்கள, முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்த பிரிவினைவாத குழுவை ஒடுக்கவேண்டிய தேவை பாதுகாப்புப் படையினருக்கு ஏற்பட்டது. பிரிவினைவாத போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்ட படையினருக்கு எதிராக வெளிநாட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

எவராவது தனிப்பட்ட ரீதியில் தவறிழைத்திருந்தால் தராதரம்பாராது, உள்நாட்டு சட்ட கட்டமைப்பின் பிரகாரம் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அதேவேளை, பிரபாகரனுக்கு பின்னர் புலிகள் அமைப்பை பொறுப்பேற்ற தலைவர் சுதந்திரமாக வெளிநாட்டில் இருக்கின்றார். கிழக்கு மாகாண தளபதியாக செயற்பட்ட கருணாவும் அரசியல் செய்கின்றார். இந்த நிலையில் சிறு குற்றங்களுக்காக கைதுசெய்யப்பட்ட புலி உறுப்பினர்களைத் தடுத்து வைத்திருப்பது நியாயமா? இது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் - என்றார். (ற-44)

### தேசியக் கொடியில் உள்ள

## சிங்கத்தில் மாற்றம்: ஐ.தே.க. வருத்தம்!

கொழும்பு,பெப்.6

இலங்கையின் தேசியக் கொடியில் மாற்றம் செய்ய அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சி வருந்தத்தக்கது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

தேசியக்கொடியை மாற்றுமாறு மக்களிடமிருந்து எந்தக் கோரிக்கையும் முன்வைக்கப்படாத நிலையில் குறுகிய நோக்கங்களுக்காக இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

"தேசியக் கொடியின் சிங்கச் சின்னத்தில் சில மாற்றங்களைச் செய்ய அரசாங்கம் விரும்புகிறது என்று ஓய்வு பெற்ற பாதுகாப்பு பொதுச்செயலாளர் கமால் குணரத்ன வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது என்றும் விஜேவர்தன மேலும் தெரிவித்தார். (ஐ-இ)

## கைதிகளிடம் அலைபேசிகள்

கேகாலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளிடமிருந்து 5 அலைபேசிகள் மற்றும் சிம் அட்டைகள் உள்ளிட்ட சில பொருள்கள் கைப்பற்றப்பட்டன. சிறைச்சாலை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பின்போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை கேகாலை சிறைச்சாலையின், விஷேட சிறைக் கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் 3 அலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை

## தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம் சுட்டிக்காட்டு

**கொழும்பு,பெப்.6**

**ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால், இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என்று தேசிய ஒருங் கமைப்பு ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.**

அத்துடன், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிடம் ஒப்படைக்குமாறுகோரி, கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத் தில், தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம் நேற்று மனுக் கையளித்தது.

மனுக் கையளித்த பின்னர் கலாநிதி குணதாச அமரசேகர மற்றும் ஒன்றியத் தின் உறுப்பினர்கள் தெரிவிக்கையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையா ளரால் எமது நாட்டுப் படையினருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச் சாட்டுகள் அடிப்படையற்றவையாகும். குற்றச்சாட்டை முன்வைப்பதற்கு முன் னர் அது தொடர்பில் விளக்கமளிப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்கு வாய்ப்பளிக்கப் பட வேண்டும். அவ்வாறானதொரு சந் தர்ப்பத்தை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வழங்கவில்லை. ஒரு தலைப்பட்சமாகவே அறிக்கை தயாரிக் கப்பட்டுள்ளது.

எனவே, விளக்கமளிப்பதற்கு எமக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையா ளரிடம் கோரியுள்ளோம். அது தொடர் பான காரணங்களை உள்ளடக்கிய மனுவே கையளிக்கப்பட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலிருந்து அரசு விலகியுள்ளதால், புதியயோசனை ஊடாக பொருளாதாரத் தடைக்கு முயற் சிக்கலாம். எதற்கும் அரசு அஞ்சக் கூடாது. என்றனர். (க-44)

# களனி பல்கலையில் ஐவருக்கு கொரோனா

கொழும்பு,பெப்.6

களனி பல்கலைக்கழகத்தில் 5 மாணவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளது.

இதனையடுத்து அந்தப் பல் கலைக்கழகத்தைச் சேர்ந்த 30 க்கும் அதிகமான மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த பல்கலைக்கழகத்தின் மனிதவள பீடத்தின் பரீட்சைகள் காரணமாக, விடுதியில் தங்கியி ருந்த மாணவர்களுக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (க-இ)

# மக்களுக்குச் சுதந்திரம் எப்போதும் இல்லை

*சரத் பொன்சேகா தெரிவிப்பு*



கொழும்பு, பெப்.6

1948ஆம் ஆண் டுக்குப் பின்னர் நாட்டில் உருவாக் கப்பட்ட எந்தவொரு அரசாங்கத்தின் கீழும் பொதுமக்க ளுக்கு உண்மையான சுதந்திரம் கிடைக்கவில்லை என ஐக்கிய மக் கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப் பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா தெரிவித்தார்.

அரசியல்வாதிகள் தங்களின் பொறுப்புகளைச் சரியாக நிறைவேற் றினால் மக்களுக்கு உண்மையான சுதந்திரம் கிடைக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)

# எக்மோ சிகிச்சையை அதிகரிக்க வேண்டும்

*மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை*

கொழும்பு,பெப்.6

கொவிட்-19 தொற்றாளர்களுக்கு வழங்கப்படும் எக்மோ சிகிச்சை குறிப்பிட்ட அளவில் இருப்பதால், அதனை அதிகரிக்க நடிவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மருத்துவர் ஹரித அளுத்கே இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இலங்கையில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொவிட் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை திற னாக்க வேண்டும். கொவிட் மரணங்களில் 70 வீதமா னவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். குறித்த வயதுக்கு உட்பவர்களுக்கிடையில் தொற்றாளர்கள் அதிகரிப்பின் மரணங்களின் எண்ணிக்கையும் அதிக ரிக்கலாம். எனவே எக்மோ சிகிச்சை அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (க-இ)

# நீர்ப்பாசன செழிப்பு திட்டம்: 5,000 கால்வாய்கள் புனரமைப்பு

கொழும்பு, பெப்.6

நீர்ப்பாசன செழிப்புத் தேசிய திட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வு வட மத்திய மாகாணத்தில் நடைபெற்றது.

நீர்ப்பாசனத் துறையின் அபி விருத்தி, கிராமப்புற குளங் களை அபிவிருத்தி செய்தல், நாடு முழுவதிலும் நீர்ப்பாசன கால்வாய்களை மேம்படுத்தல் மற்றும் தேசிய உணவு உற்பத் தியை மேம்படுத்தல் ஊடாக வறுமையை இல்லாதொழித் தல் இந்தத் திட்டத்தின் நோக்க மாகும் என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித் துள்ளது.

இதன்படி நீர்ப்பாசன செழிப்பு தேசிய திட்டம் ஊடாக எதிர்வ ரும் இரண்டு ஆண்டுகளுக் குள் 5 ஆயிரம் கால்வாய் களை புனரமைப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (ற-இ)

# அநியாய விலைக்கு உழுந்தை விற்காதீர்

## செய்கையாளர்களுக்கு எச்சரிக்கை

மன்னார்,பெப்.6

மன்னார் மாவட்டத்தில் உழுந் துச் செய்கையில் ஈடுபட்டவர் கள் மற்றும் வியாபாரிகளிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். செய்கையாளர்கள் தமக்கு ஆலோசனை தேவைப் படின், விவசாயத் திணைக்க ளத்தின் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நியாய விலையில் உழுந்தை விற் பனை செய்ய முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 777 ஏக்கரில் சிறு பயிர்ச் செய்கை யாளர்கள் உழுந்துச் செய்கை யில் ஈடுபட்டிருந்தனர். பாலம் பிட்டி, சிலாபத்துறை, இரணை இலுப்பைக்குளம் மற்றும் முருங்கன் ஆகிய பகுதிகளில் பெரும்பாலானோர் உழுந்துச் செய்கையில் ஈடுபட்டனர்.

சுமார் 300 மெற்றிக் தொன் உழுந்து அறுவடை செய்யப் பட்டுள்ளது. மன்னாரில் தற் போது ஒரு கிலோ உழுந்து 2 ஆயிரம் ரூபாவுக்கு விற் பனை செய்யப்படுகின்றது.

ஆனால் வியாபாரிகள், உழுந் துச் செய்கையாளர்களிடம் ஒரு கிலோ உழுந்தை 400 ரூபா தொடக்கம் 450 ரூபா வரை கொள்வனவு செய்கின் றனர்.

இங்கு உழுந்துச் செய்கையா ளர்கள் ஏமாற்றப்படுகின்றனர். தங்களால் உற்பத்தி செய்யப் பட்ட உழுந்தை பாதுகாத்துக் கொள்ளமுடியாது திண்டாடு கின்றனர். எனவே உற்பத்தி யாளர்கள் விவசாயத் திணைக் களத்தின் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு ஆலோ சனை பெற்றுக்கொள்ள முடி யும் என்று அறிவுறுத்தப்பட் டுள்ளது. (க-60)

# இன்றும் நாளையும் விசேட சோதனை

கொழும்பு,பெப்.6

வார இறுதி தினத்தை முன் னிட்டு இன்றும், நாளையும் மேல்மாகாணத்தில் விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித் தார்.

மேல்மாகாணத்திலிருந்து தூரப் பிரதேசங்களுக்குச் செல்லும் நபர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்ப டும். அவர்களுக்கான அன்டி ஜன் பரிசோதனை மேற் கொள்ளப்படும்.

பொதுச் சந்தைகள், பல்பொ ருள் அங்காடிகள் மற்றும் பொதுமக்கள் நடமாட்டம் அதி கமான பகுதிகளில் எழுமா றான அன்டிஜன் பரிசோ தனை முன்னெடுக்கப்படும்.

இதேவேளை, சுகாதார விதி முறைகளைக் கடைப்பிடிக் காத நிறுவனங்கள் தொடர் பில் கண்காணிப்பு நடவடிக் கைகள் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

### கொரோனா மூன்றாம் அலையால்

# 60 வயதைக் கடந்த 231 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, பெப்.6

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் 3 ஆவது அலையால் 2020 ஒக்ரோபர் 4 ஆம் திகதி முதல் நேற்று வரை 326 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 231 பேர் 60 வய தைக் கடந்தவர்களென சுகாதார அமைச்சின் தரவுகள் தெரிவிக்கின்றன.

கொரோனத் தாக்கத்தால் 10 தொடக்கம் 30 வயதுக்கிடைப்பட்ட ஐந்து பேரும், 31 தொடக்கம் 40 வயதுக்கிடைப்பட்ட ஒன்பது பேரும், 41 தொடக் கம் 50 வயதுக்கிடைப்பட்ட 30 பேரும், 51 தொடக் கம் 60 வயதுக்கிடைப்பட்ட 49 பேரும், 61 தொடக் கம் 70 வயதுக்கிடைப்பட்ட 83 பேரும், 71 வயதுக்கு மேற்பட்ட 148 பேரும் இதுவரை உயிரிழந் துள்ளனர்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தாக்கத்தின் முதலாவது அலையின் போது 13 பேர் மாத்திரமே உயிரிழந்துள்ளனர். (ற-44)

# 50 வருடங்களாக ஒரே கட்டடத்தில்; இயங்கும் பழமையான பாடசாலை!

## தளபாடங்களும் இல்லை என்று சுட்டிக்காட்டு

**கிளிநொச்சி, பெப்.6**

**கிளிநொச்சி - ஸ்கந்தபுரம் இல. 2 அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது வருடங்களுக்கு மேல் கடந்த நிலையிலும், 1969ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சுமார் நூறு அடி நீளமும் இருபதடி அகலமும் கொண்ட திறந்த மண்டபத்திலேயே மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் தளபாடங்கள் போன்ற அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.**

தரம் ஒன்று தொடக்கம் சாதாரண தரம் வரை கற்றல் செயற்பாடுகளைக் கொண்ட இந்தப் பாடசாலையில் 240க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றுவரும் நிலையில் 50 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்ட குறித்த மண்டபத்தைத் தவிர வேறு எந்தக் கட்டடங்களும் இதுவரை அமைக்கப்படவில்லை. கடந்த வருடம் கிராமத்துக்கு 2 மில்லியன் ரூபா வேலைத்திட்டம் என்ற நிதி ஒதுக்கீட்டில் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டது. ஆயினும் ஒதுக்கப்பட்ட நிதி முடிவடைந்தும் கட்டடம் முழுமை பெறவில்லை. இதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலதிக பாடங்களான விவசாயம், கணக்கியல், சங்கீதம் மற்றும் சித்திரம் போன்ற பாடங்கள் பாடசாலையில் மர நிழலின் கீழேயே நடைபெறுகின்றன. அத்துடன் போதிய தளபாட வசதிகள் இல்லை. என்று சுட்டிக்காட் டப்பட்டது.

இது தொடர்பில் பாடசாலை அதிபர் தெரிவித்ததாவது;

முழுமைப்படுத்தப்படாத நிலையிலுள்ள கட்டடத்தைக் கட்டிமுடிக்க வேண்டுமெனப் பெற்றோர் மற்றும் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஆகியோர் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கோரியதற்கு அமைய வலயக் கல்விப் பணிமனையால் கட்டடத்தை முழுமைப்படுத்த முடி வெடுக்கப்பட்டுள்ளது. இதில் பெற்றோரின் பங்களிப்பும் கோரப்பட்டுள்ளது என்றார்.

"கட்டட வளங்கள் மற்றும் மாணவர்களது கற்றல் செயற்பாடுகளுக்குரிய கதிரை, மேசைகளின் பற்றாக்குறை தொடர்பில் எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. எதிர்வரும் கிழமைகளில் அந்தப் பிரச்சினை தீர்க்கப்படும்" - என்று கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

(ப-12)

## குடும்பப் பெண் சடலமாக மீட்பு

வவுனியா, பெப்.6

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எருக்கலம்கல் பகுதியில் குடும்பப் பெண்ணொருவர் தலையில் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் வீட்டில் காணப்பட்ட அவர் அன்றையதினம் காணியின் ஒரு பகுதியில் சடலமாகக் கிடந்துள்ளார். இதனை அவதானித்த அவரது கணவர் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கும் அயலவருக்கும் தெரியப்படுத்தியுள்ளார். சம்பவ இடத்துக்குச் சென்ற பூவரசங்குளம் பொலிஸார் சடலத்தை மீட்டு விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். எருக்கலம்கல் பகுதியைச் சேர்ந்த சிவகுமார் சித்திரகலா (வயது36) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (வ-110)

## தாயும் சேயும் உயிரிழப்பு!

மட்டக்களப்பு, பெப்.6

பிரசவத்துக்காக மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளம் தாய் ஒருவரும் (வயது-30), அவரது சேயும் உயிரிழந்த சம்பவம் ஒன்று ஓட்டமாவடி பாலைநகர் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

அந்தத் தாயை பரிசோதனை செய்த மருத்துவர்கள், அவரின் வயிற்றில் சிசு உயிரிழந்து காணப்பட்டதை அடுத்து, சத்திர சிகிச்சை மூலம் உயிரிழந்த சிசுவை வெளியே எடுத்துள்ளனர். அதன் பின்னர் குறித்த பெண் மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இந்தப் பெண்ணின் சடலத்தை மருத்துவமனை நிர்வாகத்திடமிருந்து பொறுப்பேற்ற குடும்பத்தினர், பாலைநகர் ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்துள்ளனர். (ற-இ)

## தொடர்பலைச் சீரின்மையால் தகவலைப் பெறுவதில் சிரமம்

### வன்னிவிளாங்குளம் மக்கள் கவலை

வன்னிவிளாங்குளம் கிராமத்திலும் அதைச்சுற்றியுள்ள கிராமங்களிலும் தொலைபேசிகளின் தொடர்பலைச் சீரின்மையாகக் காணப்படுவதால், தகவல் தொடர்புகளைப் பெற்றுக்கொள்வதில் காலதாமதம் ஏற்படுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த கொரோனா முடக்க காலங்களில் இணையவழிக் கல்வியை மேற்கொண்ட பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர உயர்தர மாணவர்கள் தொலைபேசித் தொடர்பலை சீரின்மையால் அவர்களின் கல்விச்செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ள என தெரிவித்துள்ளனர்.

வன்னிவிளாங்குளம், மூன்றுமுறிப்பு, பாலப்பாணி போன்ற கிராமங்களிலேயே இந்த தொலைபேசித் தொடர்பலைச் சீரின்மை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-12)

## பூநகரி – அரசபுரம் வீதியில் மழைநீர் தேக்கம்

### இடைநிறுத்தப்பட்டது பேருந்துச் சேவை

கிளிநொச்சி, பெப்.6

பூநகரி - அரசபுரம் வீதியில் உருவாகியுள்ள பெரும் குழிகளில், மழை நீர் தேங்கிக் காணப்படுவதால், அந்த வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது என்று சுட்டி க்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து ஒன்று அரசபுரம் ஊடாக முக்கொம்பன் வரை சேவை வழங்கி வந்தது இந் நிலையில் கடந்த ஒரு மாத காலமாக குறித்த பேருந்துச் சேவை இடம்பெறவில்லை. குறித்த வீதியில் ஏற்பட்டுள்ள பெரும் குழிகளில் மழைநீர் தேங்கி நிற்பதால் பேருந்துகள் இதனால் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று அந்த வீதியூடாகப் பயணிக்கும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சிக் கிளை முகாமையாளரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது;

வீதி சீரின்மையால் பேருந்தை சேவையில் ஈடுபடுத்த முடியாது உள்ளது. வீதியில் உள்ள குழிகளை நிரவித் தருமாறு பூநகரி பிரதேச சபையிடம் கோரியுள்ளோம் என்றார்.

இதேவேளை "குறித்த வீதி பைக்கோ இயந்திரத்தால் சீர் செய்யப்பட்டபோதும் கடந்த நாள்களில் பெய்த மழையால் வீதியிலுள்ள குழிகளில் மழைநீர் தேங்கியுள்ளது. குழிகளிலுள்ள நீர் வற்றியவுடன் வீதியைத் தற்காலிகமாகச் சீர்செய்து, அரசபுரம் மாணவர்கள் முக்கொம்பன் மகா வித்தியா லயம் செல்வதற்கான வழியை விரைவாக ஏற்படுத்துவோம்" என்று பூநகரி பிரதேச சபையின் பள்ளிக்குடா வட்டார உறுப்பினர் கருணாகரன் தெரிவித்தார்.

(ப-13)





## யாழ். பல்கலைக்கழக

# விவசாயபீட ஆராய்ச்சி பயிற்சி நிலைய கட்டடம் திறப்பு

யப்பான் அரசின் நிதியுதவியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாயபீடத்தில் அமைக்கப்பட்ட ஆராய்ச்சி பயிற்சி நிலையம் நேற்று வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது.

நிகழ்வில் கல்வி அமைச்சர் ஜி. எல். பீரீஸ், யப்பானிய தூதுவர் அகிரா சுகியமா, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தர் ஆகியோர் கலந்து கொண்டு உத்தியோகபூர்வமாக கட்டடத்தை திறந்தனர். (ஐ-214)





















# பொத்துவில் முதல் பொலிகண்டிவரை....

3ஆம் நாள் பதிவுகள்









## இன்றைய நாள்

**மேடம்:** நடவடிக்கைகளில் கவனமாக இருந்தால் பழிச்சொல் வராது. நேர்மையான செயலால் யாரையும் எதிர்க்க முடியாமல் ஆக்குவீர்கள். சகபணியாளர்களை தன்வசப்படுத்தும் திறமை வரும்.

**இடபம்:** கணவன், மனைவி இடையே கருத்து ஒற்றுமை வரும். முன்பு இருந்ததை விட பணியாளர்களுக்கு வேலைப்பளு குறையும். அலுவலகத்திலிருந்து சிறு பரிசுகள், அன்பளிப்பு வரும்.

**மிதுனம்:** நிம்மதியான நாள். உறவினரிடமிருந்து நற்செய்தி வரும். நீங்கள் நினைத்துப் பார்க்காதவர்கள் உதவி கேட்டு வருவர். கருத்து வேறுபாடுகளால் பிரிந்த குடும்பங்கள் சேரும்.

**கடகம்:** முயற்சியின் காரணமாக பணவரவு சற்றே அதிகரிக்கும். புதிய வேலை தேடியவர்களுக்கு வாய்ப்பு கண்ணில் படும். பிள்ளைகளின் கல்வி, பணி பற்றிய கவலைகள் தீரும்.

**சிம்மம்:** நண்பர்கள், உறவினர்களிடையே இருந்த பகை உணர்ச்சி மாறும். சேமிக்கத் தொடங்குவீர்கள். நண்பர்களால் ஆதாயம் உண்டு. பணவரவு முன்பின்னாக இருந்தாலும் செலவு கட்டுக்குள் இருக்கும்.

**கன்னி:** சமீபத்தில் வாங்கிய பொருள்களின் பண மதிப்பு உயரும். துன்பங்கள் தீரும். தொடர்புவிட்டுப்போன உறவினர் வருவர். பொறாமைக்காரர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அனைத்தும் தீரும்.

**துலாம்:** பிள்ளைகளின் கல்வி, எதிர்காலம் பற்றிய பயம் தீரும். திறமைகளை வெளிப்படுத்த முடியாதபடி இருந்த தடை நீங்கும் சுபநிகழ்ச்சி நல்லபடியாக நடப்பதற்கான அறிகுறி தெரியும்.

**விருச்சிகம்:** முன்னேற்றத்தில் இருந்து வந்த தடைகள் விலகும் நாள். குறிக்கோளை அடையக் குடும்பத்தாரின் ஆதரவு அதிகரிக்கும். உங்களின் முயற்சிக்கு நல்ல பலனும், விருதுகளும் கிடைக்கும்.

**தனுசு:** கடனாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். இனிமையான நண்பர்களுடன் மகிழ்ச்சியாகப் பொழுது கழியும். நட்பு வட்டம் பலப்படும். பழைய சிக்கல் ஒன்று தீரும்.

**மகரம்:** எதையும் சமாளிக்கக்கூடிய சாமர்த்தியம் பிறக்கும். நினைத்ததை முடிப்பீர்கள். நல்லவர் நட்பு கிடைக்கும். வீடு மாறும் எண்ணத்தைத் தள்ளி வைப்பது நல்லது.


**கும்பம்:** குடும்பத்தில் சொத்து சம்பந்தமான விவாதங்கள் வரும். உங்களுக்கான பாராட்டுதலை பிறர் பெற்று வந்த நிலை மாறும். நற்செயலுக்காக குடும்பத்தை விட்டுப் பிரிய வேண்டி வரும்.

**மீனம்:** நேற்று இருந்த கவலைகள் முழுக்க காணாமல் போகும். பழைய பகைவர்கள் கண்காணாமல் போவார்கள். பிறர் விடயத்தில் தலையிடாமல் தவிர்த்து விடுங்கள்.

# ஆயிரம் ரூபாவை வலியுறுத்தி அடையாள வேலை நிறுத்தம்

மலையகம், பெப்.6

தமது நாள் சம்பளம் ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நேற்று அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும், அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காகவும் மலையகத்திலுள்ள பிரதான நகரங்களில் நேற்று கடையடைப்பு போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு பெருந்தோட்டக் கம்பனிகள் இன்னும் இணக்கம் தெரிவிக்கவில்லை. தொழில் நிபந்தனைகள் அடிப்படையிலேயே சம்பள உயர்வை வழங்குவதற்கு அவர்கள் தயார் நிலையில் இருக்கின்றனர். இதனால் சம்பள நிர்ணயசபை ஊடாக சம்பளம் தீர்மானிக்கப்பட வேண்டும் என தொழிற்சங்கங்கள் வலியுறுத்தின. இதன்படி 8 ஆம் திகதி சம்பள நிர்ணய சபை கூடவுள்ளது. கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலும், சம்பள நிர்ணய சபை பேச்சு வெற்றியளிக்க வேண்டும் என்பதற்காகவும் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அழைப்பு விடுத்திருந்தது. இதற்கு மலையகத்திலுள்ள கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகள் என்பன ஆதரவு தெரிவித்திருந்தன. அத்துடன், நகர வர்த்தகர்களும் தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கடையடைப்பில் ஈடுபட்டனர். அத்தோடு சில பாடசாலைகளும் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகளுக்கு வருகை தந்த மாணவர்கள் வீடுகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். (ப)

# தோட்டத் தொழிலாளருக்கு ஆதரவு; கொழும்பு வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டம்




கொழும்பு, பெப்.6

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை வலியுறுத்தி, கொழும்பு, செட்டியார் தெரு வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

மலையகத்தில் நேற்று முழுக் கதவடைப்பு போராட்டம் கடைப்பிடிக்கப்பட்ட நிலையில், செட்டியார் தெரு வர்த்தகர்கள் நேற்றையதினம் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். செட்டியார் தெருவிலுள்ள வர்த்தக நிலையங்களை மூடி, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் போராட்டத்துக்கு அவர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். அதேநேரம் கொழும்பு ஐந்துலாம்புச் சந்தியில் பதாகைகளை ஏந்தியும், செட்டியார் தெரு வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெ டுத்தனர். (ப)


# ரஞ்சனின் ஆசனம் தொடர்பில் நடவடிக்கையைத் தவிர்க்கவும்

## முறையீட்டு நீதிமன்று உத்தரவு

கொழும்பு, பெப்.6

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற ஆசனம் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையையும் எடுப்பதைத் தவிர்க்குமாறு மேன் முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி பெப்ரவரி 12 ஆம் திகதி வரை இது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டாம் என நாடாளுமன்ற பொதுச் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டுக்காக ரஞ்சன் நாமநாயக்கவுக்கு நான்கு ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)



# காய்ச்சல் பரிசோதனை அறை திறப்பு

சாவகச்சேரி, பெப்.6

சாவகச்சேரி மருத்துவமனையில் காய்ச்சல் பரிசோதனைக்கான அறை, மருத்துவமனைப் பொறுப்பதிகாரி டயாளினி மகேந்திரனால் நேற்றுத் திறக்கப்பட்டது.

கொவிட்-19 உட்பட பல்வேறு காய்ச்சல்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சைபெற வருவோருக்குத் தனியான அறை தேவையாகவுள்ளது என்று மருத்துவமனைப் பொறுப்பதிகாரியால் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

அதனையடுத்து, மருத்துவமனையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில், சாவகச்சேரி பொன்னுச்சாமி வீதியைச் சேர்ந்த பொ.உருத்திரன் என்பவரால், சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் இந்த அறை அமைக்கப்பட்டுள்ளது. (க-9)

# தீவகத்துக்கான மருத்துவசேவை குறைபாடுகளை நீக்க யோசனை

## முன்மொழிந்தார் ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி நந்தகுமார்

**யாழ்ப்பாணம், பெப். 6**

**தீவகத்தில் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் நிலவிவரும் மருத்துவ சேவைக் குறைபாடுகளை குறைக்கும் சிறந்த யோசனையை ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி பரா.நந்தகுமார், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்மொழிந்தார். இருப்பினும் இந்த யோசனைக்கு ஒருங்கிணைப்புக் குழுவிலிருந்து சாதகமான பதில் வழங்கப்படவில்லை.**

அவரது முன்மொழிவில் கூறப்பட்டுள்ளதாவது:

தீவகத்துக்கான விசேட மருத்துவப் பொறிமுறையை, ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையை மையமாகக் கொண்டு 8 தீவக மருத்துவமனைகளையும்இணைத்து உருவாக்கவேண்டும்.

தீவகத்தில் ஆதார மருத்துவமனையாக ஊர்காவற்றுறை மருத்துவமனை உள்ளது. பிரதேச மருத்துவமனைகளாக நெடுந்தீவு, வேலணை, காரைநகர், நயினாதீவு, புங்குடுதீவு, அனலைதீவு, மண்டைதீவு என்பனவும், ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையமாக எழுவைதீவும் உள்ளன.

இவற்றில் பெரும்பாலானவற்றில் சுகாதார ஆளணி முழுமையாக நிரப்பப்பட முடியாத நிலை போருக்குப் பின்னரான 10 ஆண்டுகளிலும் நீடிக்கின்றது.

இந்தப் பிரதேசத்தில் தனியார் சிகிச்சை நிலையங்கள், ஆய்வு கூடங்கள், மருந்தகங்கள் என்பன கூடக் கிடையாது. எனவே இங்குள்ள 4 பிரதேச செயலக மக்களும் முற்றுமுழுதாக அரச மருத்துவமனைகளையே நம்பி உள்ளனர்.

பல்வேறுபட்ட புவியியல் காரணிகள், இடப்பெயர்வின் பின் சனத்தொகை வீழ்ச்சி மற்றும் மக்கள் ஐதாக வசித்தல், போக்குவரத்து இடர்பாடுகள் என்பனவற்றால் ஆளணியைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் சேவைகளை தனித்தனியாக எல்லா இடங்களிலும் உருவாக்க முடியாதுள்ளன. இதற்கு மாற்றீடாக விசேட பொறிமுறை தேவைப்படுகின்றது.

ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையை தீவகத்துக்கான விசேட மேல்நிலை ஒருங்கிணைப்பு மருத்துவமனையாகக் கொண்டு அதன் கீழ் ஊட்ட மருத்துவமனைகளாக 8 தீவக மருத்துவமனைகளும் இணைக்கப்பட வேண்டும். இதன் மூலம் மருத்துவ நிபுணர்கள் சேவை, ஆய்வு கூட சேவைகள், மருத்துவர், தாதியர்களின் சுழற்சி ரீதியிலான கடமை ஒதுக்கீடுகள், மருந்துகளின் சமச்சீர் விநியோகம் மற்றும் உடனடி நோயாளர் இடமாற்றங்கள் என்பனவற்றை இலகுவாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதி வாய்ந்த நிலையிலும் மேற்கொள்ள முடியும்.

இதற்கு தற்போது அனுமதிக்கப்பட்ட மருத்துவர் ஆளணியாக உள்ள 15 மருத்துவர்களை ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனைக்கு நியமித்தாலே போதுமானது.

யாழ்ப்பாண நகரிலிருந்து 30 நிமிடங்களில் தரை வழியாக சிறந்த காப்பெற் வீதி ஊடாகப் பயணம் செய்து ஊர்காவற்றுறை மருத்துவமனைக்குச் செல்ல முடியும். எனவே மருத்துவ ஆளணியினர் அங்கு செல்ல பின்னடிக்க வேண்டிய அவசியமில்லை.

அதேநேரம் ஓர் கடல் கடந்த தீவில் ஒரு மருத்துவர் 24 மணி நேரமும் வாரத்தின் ஏழு நாள்களும் தனது குடும்பத்தை விட்டு கடமையாற்ற வருவார் என்று எதிர்பார்க்கவும் முடியாது. இதனாலேயே கடந்த பல தசாப்தங்களாக ஆளணி காட்டப்பட்டும் சில கடல் கடந்த தீவுகளின் வெற்றிடங்கள் நிரப்பப்படாமலேயே இருக்கின்றன.

இதனால் மாவட்டத்துக்கு கிடைக்க வேண்டிய 5 மருத்துவர்கள் ஒவ்வொரு வருடமும் இழக்கப்பட்டு வருகின்றனர்.

அதேநேரம் மாகாண மட்டத்தில் முடிவு எடுக்கக்கூடிய ஏனைய படிநிலைகளிலுள்ள மருத்துவர்களை சுழற்சி அடிப்படையில் கடல் கடந்த தீவுகளில் நியமிப்பதும் எப்போதும் ஒரு மருத்துவர் இத்தீவு மருத்துவமனைகளில் இருப்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

மேலும் அனைத்து தீவுகளுக்குமான அம்புலன்ஸ் படகுச்சேவையை ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் இறங்கு துறையுடன் இணைப்பதன் மூலம் மேலதிக சிகிச்சை தேவைப்படும் அவசர நோயாளிகளை மற்றும் கர்ப்பவதிகளை குறுகிய நேரத்தில் ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனைக்குச் சேர்ப்பிக்க முடியும். மிக மோசமான, நீளமான குறிகட்டுவான் வீதியால் நீண்ட நேரம் பயணித்து பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்கும் நோயாளிகள் மற்றும் கர்ப்பவதிகளின் கொடுந்துன்பமும் நீங்கும்.

சிறந்த மருத்துவ சேவைகளுக்கு ஏங்கித் தவிக்கும், தற்போது பல்வேறுபட்ட வசதியீனங்களுடன் வாழும் இந்தத் தீவக மக்களுக்கு உதவ வேண்டியது, முடிவு எடுக்கக் கூடிய, செயற்படுத்தக்கூடிய அதிகாரம் உள்ள சகலரதும் கடமையாகும், என்று அந்த முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயத்தை மருத்துவர் நந்தகுமார் விரிவாக விளங்கப்படுத்தினார். ஆனால் ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்கள் பொறுப்பான, உரிய பதிலை வழங்கவில்லை-என்றார். (ஒ,ப,5)

# எம்.பிக்களின் கோரிக்கையை இருட்டடிப்புச் செய்த டி.சி.சி.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியனவற்றைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமர்ப்பித்த முன்மொழிவுகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்வைப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் தமது முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தனர்.

வழமையாக நிகழ்ச்சி நிரலில் முதலாவது விடயமாக அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும் திட்டங்கள் முன்வைக்கப்படும். இரண்டாவதாக நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் எடுத்துக் கொள்ளப்படும். ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் முன்மொழிவுகள் எவையும் நடைபெற்று முடிந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் ஆரம்பத்தில் இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கேள்வி எழுப்பியதுடன், தனது முன்மொழிவுகளை சபையில் வாசிக்க முயற்சித்தார். அதற்குப் பதிலளித்த இணைத் தலைவர்களுள் ஒருவரான இ.அங்கஜன், முன்மொழிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகள், அந்தந்த விடயதானங்கள் ஆராயப்படும்போது எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார். ஆனால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவ்வாறு எடுக்கப்படவில்லை.

மீள்குடியேற்றம் மற்றும் தொல்பொருள் சார்ந்த இரண்டு விடயங்களிலும் மாத்திரம், முன்மொழிவுகள் சமர்ப்பித்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் நீக்கப்பட்டு பொதுவான முன்மொழிவாக சமர்ப்பிக்கப்பட்டது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் இணைத் தலைவர்களுள் ஒருவரான இ.அங்கஜன், மாவட்டச் செயலர் க.மகேசன், திட்டமிடல் பணிப்பாளர் திருமதி நிக்கிலாஸ்பிள்ளை மற்றும் பிரதேச செயலர்களுடனான கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் உள்ளடக்க வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமர்ப்பித்த முன்மொழிவுகளும் ஆராயப்பட்டன. திட்டமிடல் பணிப்பாளர், தேசியக் கொள்கைகளுடன் தொடர்புடைய விடயங்களில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்ற முடியாது என்ற சுற்றறிக்கையை இதன்போது காண்பித்துள்ளார்.

அதற்கு அமைவாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் சமர்ப்பித்த மாவீரர் துயிலும் இல்லக் காணி தொடர்பான முன்மொழிவு கவனத்தில் எடுக்கப்படவில்லை. ஆனாலும், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கஜேந்திரன் மாவீரர் துயிலும் இல்லம் தொடர்பான முன்மொழிவை வாசித்தபோதும் தீர்மானமாக அது நிறைவேற்றப்படவில்லை. (ஒ,5)

### யாழ். மருத்துவபீட பட்டப்படிப்புக்காக

# தெல். மருத்துவமனையின் 2 பிரிவுகளை கொழும்பிடம் கையளிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 6

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு மற்றும் உளநல சிகிச்சைப் பிரிவு என்பனவற்றை கொழும்பு அரசிடம் கையளிக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் பட்டப்படிப்புக்காக இவற்றைக் கையளிக்குமாறு பல்கலைக்கழக மருத்துவபீடத்தால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள மருத்துவபீடங்களில் வழங்கப்படும் பட்டங்களுக்கான தகைமை எப்படியிருக்கவேண்டும் என்ற வர்த்தமானி இலங்கை அரசால் இந்த ஆண்டு ஆரம்பத்தில் வெளியிடப்பட்டது. இந்த வர்த்தமானிக்கு அமைவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடமும் தனது பட்டத் தகைமையை வழங்கவேண்டியுள்ளது. இதற்காக மருத்துவபீட மாணவர்களுக்கு புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு மற்றும் உளநல சிகிச்சைப் பிரிவுகளில் பேராசியர்துறையில் கற்பதற்கு தெல்லிப்பழை மருத்துவமனையையே பயன்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கொழும்பு சுகாதார அமைச்சின் கீழ் உள்ள போதனா மருத்துவமனைகளிலேயே கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும். இதன் காரணமாக தெல்லிப்பழை மருத்துவமனையிலுள்ள புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு மற்றும் உளநல சிகிச்சைப் பிரிவு என்பனவற்றை கொழும்பு அரசுக்கு வழங்குமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தினர் கோரியுள்ளனர்.

இதனை அடிப்படையாகக் கொண்டு தெல்லிப்பழை மருத்துவமனையை கொழும்பு சுகாதார அமைச்சிடம் கையளிக்கும் யோசனை யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. ஆனால் அந்த யோசனையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிராகரித்ததுடன், இந்த விடயம் தொடர்பில் பல்கலைக்கழக மருத்துவபீடத்தினருடன் கலந்துரையாடல் நடத்துவோம் என்று தெரிவித்திருந்தனர். (ஒ,5)

### தெல்லிப்பழை மருத்துவமனை:

## மைத்திரியின் பொய்த்துப்போன மற்றொரு வாக்குறுதி அம்பலம்

யாழ்ப்பாணம், பெப். 6

சுகாதார அமைச்சராக இருந்தபோது மைத்திரிபால சிறிசேன வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் போனது யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அம்பலமாகியது.

தெல்லிப்பழை மருத்துவமனையின் புற்றுநோய் மருத்துவமனை தொடர்பான விடயத்திலேயே அவரது வாக்குறுதி பொய்யாகியுள்ளது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெல்லிப்பழை மருத்துவமனையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை, மாகாண அமைச்சால் தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாது என்று சுட்டிக்காட்டப்பட்டது. அதற்குப் பெருமளவு நிதி தேவைப்படுவதால் கொழும்பு அரசிடம் மருத்துவமனையை விடுவிக்கவேண்டும் என்றும் கோரப்பட்டது.

இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கொழும்பு அரசு மருத்துவமனையை தனக்குள் உள்வாங்கி வழங்கவுள்ள நிதியை மாகாண அரசின் ஊடாக வழங்கலாமே என்று சுட்டிக்காட்டினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஓர் விடயத்தை இதன் போது வெளிப்படுத்தினார்.

தெல்லிப்பழை மருத்துவமனையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, நடைபயணம் ஊடாகச் சேகரிக்கப்பட்ட நிதியில் கட்டப்பட்டது. இதன் திறப்பு விழா 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதி நடைபெற்றது. அந்த நிகழ்வில் நானும் கலந்து கொண்டிருந்தேன். அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

அங்கு உரையாற்றிய மைத்திரிபால சிறிசேன, புற்றுநோய் சிகிச்சைப் பிரிவைக் காரணம் காட்டி தெல்லிப்பழை மருத்துவமனையை மாகாணத்திடமிருந்து கொழும்பு அரசு பெற்றுக்கொள்ளாது. இலங்கையில் உள்ள புற்றுநோய் மருத்துவமனைகள் மூன்றுக்கும் ஒதுக்கப்படும் நிதி சமமாகப் பிரிக்கப்பட்டு தெல்லிப்பழை மருத்துவமனைக்கு வழங்கப்படும் என்று உறுதியளித்திருந்தார்.

அவ்வாறு நிதி ஒதுக்கப்பட்டிருக்கவேண்டும் என்று குறிப்பிட்ட சுமந்திரன், நிதி விவகாரத்தை முன்னிலைப்படுத்தி தெல்லிப்பழை மருத்துவமனையை கொழும்பு அரசுக்கு உள்வாங்க அனுமதிக்க முடியாது- என்றார். (ஒ,5)

## 150 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 150 பாடசாலை மாணவர்களுக்கு தலா 4 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன்,59 ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளதி மேஜர் ஜெனரல் ஜெகத் ரத்னாயக்க முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் உமாநிதி புவனராஜா,முல்லைத்தீவு சுகாதார மருத்துவ அதிகாரி வே.சிறீராம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இலங்கை நற்குண முன்னேற்ற அமைப்பின் நிதியுதவியில் படையினரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (ஜ-19)

### யாழ்ப்பாணத்தில்

## மருத்துவக் கழிவுகளை எரியூட்ட புதிய இயந்திரம் கொள்வனவு!

யாழ்ப்பாணம், பெப். 6

**யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உள்பட்ட மருத்துவமனைகளின் மருத்துவக் கழிவுகளை எரியூட்ட இந்த ஆண்டுக்குள் புதிய இயந்திரம் கொள்வனவு செய்யப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

'தெல்லிப்பழை மற்றும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைகளில் மருத்துவக்கழிவுகளை எரியூட்டும் இயந்திரங்கள் இருக்கின்றன. பருத்தித்துறையில் உள்ள இயந்திரம் பழுதடைந்துள்ளது. யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உள்பட்ட அனைத்து மருத்துவமனைகளினதும் மருத்துவக் கழிவுகள் நாளொன்றுக்கு 100 கிலோ வரையில் சேரும். அவற்றை எரியூட்டுவதற்கு நாம் புதிய இயந்திரம் கொள்வனவு செய்யவுள்ளோம். அதனை கரவெட்டி பிரதேச சபைக்குச் சொந்தமான கழிவுகளை முகாமைத்துவம் செய்யும் இடத்தில் அமைக்கத் திட்டமிட்டுள்ளோம்' என்று கேதீஸ்வரன் குறிப்பிட்டார்.

'தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையிலுள்ள மருத்துவக் கழிவுகளை எரியூட்டும் இயந்திரம் தனியார் நிறுவனத்துக்குரியது. கொழும்பு சுகாதார அமைச்சு அதனை வழங்கியுள்ளது. இதற்குரிய நிர்வாகச் செயற்பாடுகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையால் நிர்வகிக்கப்படுகின்றன. தற்போது அதனை வேறு இடத்தில் அமைப்பது பற்றி ஆராயப்பட்டு வருகின்றது. மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையின் சாத்தியக்கூற்று அறிக்கைக்காக காத்திருக்கின்றோம். மண்டைதீவு மருத்துவமனையின் பின்பாக எமக்குச் சொந்தமான காணி உள்ளது. அதன் அருகில் மக்களின் இருப்பிடங்களும் குறைவாகவே உள்ளன. சுற்றுச்சூழல் அதிகார சபையின் அனுமதி மற்றும் அந்தப் பகுதி மக்களின் அனுமதியுடன் அங்கு அமைக்கத் திட்டமிடுகின்றோம்' என்றும் கேதீஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

தெல்லிப்பழை மருத்துவமனையிலுள்ள எரியூட்டும் தொகுதியின் புகைபோக்கியின் உயரம் போதியளவு இல்லை என்றும், எரிக்கும் போது அதன் கதவை திறந்து வைத்தே எரிப்பதாகவும் எழும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் கேதீஸ்வரன் பதிலளித்தார்.

'எரியூட்டும் தொகுதியின் கதவு சேதமடைந்திருந்தது. தற்போது அது சீர்செய்யப்பட்டுள்ளது' என்றார் அவர்.

இதேவேளை கரவெட்டி பிரதேச சபையின் கழிவுகளை முகாமைத்துவம் செய்யும் இடத்தில், கரவெட்டிப் பிரதேச சபையால் பல திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. அவற்றுக்குரிய இடங்களை ஒதுக்கீடு செய்த பின்னர், காணி எஞ்சினாலேயே மருத்துவக் கழிவுகள் எரியூட்டி அமைக்க காணியை வழங்க முடியும் என்று கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளர் ஐங்கரன் தெரிவித்தார். (ஒ,5)

## எதிர்க் கட்சியின் முக்கிய புள்ளிகளின் குடியுரிமையைப் பறிக்க அரசு திட்டம்

*முன்னாள் சபாநாயகர் தெரிவிப்பு*

கொழும்பு, பெப்.6

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய அடுத்த தேர்தலுக்கு முன்னர் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளில் முன்னணியில் இருப்பவர்களின் பிரஜா உரிமையை இல்லாமல் செய்து ஏகாதிபத்தியதுக்கான வழி அமைப்பதே அரசின் திட்டமாகும் என்று முன்னாள் சபாநாயகரும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

கடந்த வாரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை சமூகமயப்படுத்தப்பட்டிருக்கும் அறிவிப்புக்களுக்கமைய, அந்த அறிக்கையானது நீதிமன்றத்துத்துச் செய்யும் அவமானமாகும் என்பதே அதிகமான சட்டத்துறை சார்ந்த நிபுணர்களின் நிலைப்பாடாகும். ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை மூலம் இந்த நாட்டில் முன்னணி அரசியல்வாதிகள் உள்பட கடமைகளை நேர்மையாக மேற்கொண்ட சில அரச அதிகாரிகளை அழித்துவிடும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதை எம்மால் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. மேலும் இந்த ஆணைக்குழு வழங்கியிருக்கும் பரிந்துரைகள் மக்கள் மத்தியில் நகைச்சுவையாகி இருக்கின்றன - என்றுள்ளது. (ஐ-இ)

### சுகாதாரப் பரிசோதகர்களுக்கு

## மோட்டார் சைக்கிள் வழங்குவது யார்?

யாழ்ப்பாணம், பெப். 6

உள்ளூராட்சி திணைக்களங்களின் கீழ் பணியாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் இடமாற்றங்களை மாத்திரம் சுகாதார அமைச்சு கையாளும். ஆனால் அவர்களுக்கு மோட்டார் சைக்கிள் உள்ளூராட்சி அமைச்சுத்தான் வழங்கவேண்டும் என்பது எந்த வகையில் நியாயம்? இவ்வாறு கேள்வி எழுப்பினார் யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் வி.மணிவண்ணன்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. சுகாதாரத்துறை தொடர்பான பிரச்சினைகள் ஆராயப்பட்டன. யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உள்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு வேலைகள் அதிகம் என்பதால் அவர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன், சுகாதார அமைச்சின் கீழ் பணியாற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கே சுகாதார அமைச்சால் மோட்டார் சைக்கிள்கள் வழங்க முடியும். உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் பணியாற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு சுகாதார அமைச்சால் மோட்டார் சைக்கிள்கள் வழங்க முடியாது. உள்ளூராட்சித் திணைக்களமே அவற்றை வழங்கமுடியும், என்றார்.

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸும் அந்தக் கருத்தை ஆமோதித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாணம் மாநகரசபை மேயர் வி.மணிவண்ணன், உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் பணியாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை சுகாதார அமைச்சுத்தான் இடமாற்றம் செய்யும் என்று சொல்கிறார்கள். இது தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்கும் நிலுவையில் உள்ளது. மோட்டார் சைக்கிள் வழங்கச் சொன்னால் மாத்திரம் உள்ளூராட்சித் திணைக்களம்தான் அதனைச் செய்யவேண்டும் என்று கூறுவதில் என்ன நியாயம்? என்று கேள்வி எழுப்பினார். இருப்பினும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அதற்குரிய பதில் வழங்கப்படவில்லை. (ஒ,5)

## கருங்கல்லில் சிக்கி குழந்தை உயிரிழப்பு

கொழும்பு, பெப்.6


கருங்கல் ஒன்றில் சிக்கி 4 வயதுடைய குழந்தையொன்று பண்டாரவெல ஹல்தும்முல்லை ஹரங்கஹவ பிரதேசத்தில் உயிரிழந்துள்ளது. தாய், தந்தையுடன் உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றிருந்தபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. தந்தையுடன் கருங்கல் ஒன்றில் அமர்ந்து குழந்தை உணவருந்திக் கொண்டிருந்தபோது அங்கு குரங்கொன்று வந்துள்ளது. இதன்போது, கல்லில் இருந்து அவர்கள் பாய்ந்துள்ள நிலையில் கருங்கல் கவிழ்ந்து இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (வ-இ)

# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையை அரசு பகிரங்கப்படுத்த வேண்டும்

### மல்கம் ரஞ்சித் வேண்டுகோள்

**கொழும்பு, பெப்.6**

**ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை மூடிமறைப்பதற்கு அரசாங்கம் முயல வேண்டாம் என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



73 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு, இடம்பெற்ற ஆராதனையின் போது கர்தினால் மல்கம் ரஞ்சித் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக்குழுவின் அறிக்கையை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும். 30 வருட கால யுத்தத்திலிருந்து மீண்ட இலங்கையை மீண்டும் கட்டியெழுப்பும் வகையில், அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாட்டில் மீண்டும் இன்னொரு மோதலைத் தூண்ட முயன்றவர்கள் யார் என்பதை வெளிப்படுத்தவேண்டும். கடந்த காலத்தில் தலைவர்கள் ஆணைக்குழுக்களின் அறிக்கையை மறைத்தது போன்று இதனையும் மறைக்க வேண்டாம் - என்றார். (ற-இ)

## அபிவிருத்தி தொடர்பான திட்ட மீளாய்வு

கொடிகாமம், பெப். 6

மக்கள் பங்கேற்புடனான அபிவிருத்தி தொடர்பான திட்ட மீளாய்வு சாவகச்சேரி பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் இடம்பெற்ற இந்த மீளாய்வில் ஏற்கனவே குறித்த திட்டத் தயாரிப்பின் போது இனங்காணப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களுடன் புதிதாக இனங்காணப்பட்ட திட்டங்களையும் ஒன்றுசேர்த்து முன்னுரிமை அடிப்படையில் ஒழுங்கு செய்யப்பட்டன.

இந்த மீளாய்வுத் திட்டத்தில் சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர், சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சகல வட்டாரங்களைச் சேர்ந்த மக்கள் பலரும் கலந்துகொண்டனர். (ச-159)



## கதிரைகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், பெப், 6

மானிப்பாய் பிரதேச மருத்துவமனைக்கு, தனிநபர் இடைவெளியைப் பேணக்கூடிய வகையில் கதிரைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

மானிப்பாய் பிரதேச மருத்துவமனைக்கு தினமும் 250 தொடக்கம் 400 வரையான நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்காக வருகை தருகின்றார்கள். அங்குள்ள வாங்குகளில் இவர்கள் நெருக்கமாக இருப்பதனால் தனிநபர் இடைவெளியைக் கடைப்பிடிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

இந்த நிலை குறித்து மேற்படி மருத்துவமனையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் ஆனைக்கோட்டையில் உள்ள கட்டட ஒப்பந்த நிறுவனத்தின் உரிமையாளருக்குத் தெரியப்படுத்தியதுடன் நோயாளர்கள் தனிநபர் இடைவெளியை பேணக்கூடிய வகையில் கதிரைகளை வழங்குமாறு கோரியுள்ளனர்.

இவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நிறுவன உரிமையாளர் அன்ரன் இராஜசேகரம் 100 பிளாஸ்ரிக் கதிரைகளை மருத்துவமனைக்கு அன்பளிப்பாக வழங்கினார். (ய-115)

## யாழ்.வர்த்தக சமூகத்தினரும் போராட்டத்துக்குப் பேராதரவு

### *பேரணியில் இணையுமாறும் அழைப்பு*

யாழ்ப்பாணம், பெப். 6

இலங்கையில் தொடரும் இன அடக்குமுறைக்கு எதிரான தமிழ் பேசும் மக்களின் கவனவீர்ப்புப் பேரணிக்கு யாழ்ப்பாணம் வர்த்தக சமூகமும் பேராதரவு வழங்குகின்றது.

அம்பாறையின் பொத்துவிலில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்த இந்தப் பேரணி, யாழ்ப்பாணம் பொலிகண்டியில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியுடன் நிறைவடையவுள்ளது.

அன்றையதினம் பிற்பகல் 3 மணியளவில் பேரணி யாழ்ப்பாணம் நகரை வந்தடையும்போது யாழ்ப்பாண நகர வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பேரணியில் இணைந்து பேராதரவு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (து-இ)

## பகுப்பாய்வு கிடைப்பதில் தாமதம்: கொலை வழக்கு ஒத்திவைப்பு

தலைமன்னார், பெப். 6

தடயப் பொருள்களின் பகுப்பாய்வு மன்றுக்குக் கிடைக்கப்பெறாமையால், மன்னார் மாந்தை மேற்கு கிராம அலுவலரின் கொலை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் கிராம அலுவலர்களுக்கான பதில் நிர்வாக அலுவலராகவும் இலுப்பைக்கடவை கிராம அலுவலராகவும் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில் எஸ்.விஜயேந்திரன் (வயது-55) கடந்த நவம்பர் 3 ஆம் திகதி கொல்லப்பட்டார். அவர் அன்றையதினம் கடமையை முடித்துக் கொண்டு இரவு தனது வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த வேளையில் கொல்லப்பட்டிருந்தார். கொலை தொடர்பாக ஒருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு மன்னார் நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்குத் தொடர்பாக கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திலிருந்து ஓர் அதிகாரியும் சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி எஸ்.டினேஸும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

கொலை தொடர்பாகக் கண்டுபிடிக்கப்பட்டு பகுப்பாய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்ட தடயப் பொருள்கள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை என்று குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரி மன்றில் தெரிவித்தார். அதனையடுத்து எதிர்வரும் 17ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. கொரோனாத் தொற்றுக் காரணமாக சந்தேகநபரை சிறை அதிகாரிகள் மன்றில் முற்படுத்தவில்லை. (கு-60)

## மயானத்தில் மயங்கிய நபர் மீட்பு

சாவகச்சேரி, பெப்.6

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயான மண்டபத்தில் மயங்கிய நிலையிலிருந்த நபரொருவர் நேற்று முன்தினம் காலை மீட்கப்பட்டார்.

முழங்காவிலைச் சேர்ந்த 53 வயதுடைய நபரே மீட்கப்பட்டு, சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தனங்களப்பு வீதி வழியாகச் சென்ற பொதுமக்கள், சாவகச்சேரி பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். அதனையடுத்து அங்கு சென்ற பொலிஸார் நோயாளர் காவு வண்டியை வரவழைத்து, அவரை சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

அவர் அளவுக்கு அதிகமாக மது அருந்தியதாலேயே மயக்கியிருந்துள்ளார் என்று மருத்துவமனையில் தெரிவிக்கப்பட்டது. (க-9)

## அனைத்து கிளினிக்குகளும் வழமைபோன்று இயங்கும்

சாவகச்சேரி, பெப்.6

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வழமை போல அனைத்து கிளினிக்குகளும் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

சிகிச்சை பெற வருவோர் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து சிகிச்சைக்கு வருமாறு மருத்துவர் டயாளினி மகேந்திரன் தெரிவித்தார்.

கொரோனாக் காலத்தை முன்னிட்டு மருத்துவமனையில் நடைபெற்று வந்த கிளினிக்குகள் நிறுத்தப்பட்டு நோயாளர்களுக்கு அவர்களது முகவரிக்கு மருந்துகளை அஞ்சல் திணைக்களம் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-9)

## மாசி மகத்தன்று சிவதீட்சை

சாவகச்சேரி,பெப்.6

சாவகச்சேரி வடக்கு, ஞானவீரபத்திரர் கோவிலில் எதிர்வரும் 26 ஆம் திகதி மாசி மக பௌர்ணமியை முன்னிட்டு, மாணவர்கள் மற்றும் அடியார்களுக்கு சிவதீட்சை வழங்கப்படவுள்ளது.

கடந்த தைப்பூசத் தினத்தன்று மாணவர்களுக்கு கோவிலில் சிவதீட்சை வழங்கப்பட்டது.

ஏனையவர்களின் கோரிக்கைக்கு அமைவாக, மாசி மக பௌர்ணமி தினத்தன்று சிவதீட்சை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சிவதீட்சை பெற விரும்புவோர் கோவில் பரிபாலன சபையினருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# பிள்ளையானுக்கு ஒரு நீதி ஆதித்தியனுக்கு வேறு நீதியா?

## சட்டத்தரணி கே.வி.தவராசா வாதம்

**கொழும்பு, பெப். 6**

**மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசதுரை சந்திரகாந்தனுக்கு (பிள்ளையான்) ஒரு நீதி, 12 ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கனகரத்தினம் ஆதித்தியனுக்கு வேறு நீதியா? சந்திரகாந்தனுக்கு வழங்கப்பட்ட அதே நீதி ஏனைய அரசியல் கைதிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா மன்றில் தனது வாதத்தை முன்வைத்தார்.**

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் பசீர் வலி மொகமட்டைக் கொலைசெய்ய சதித்திட்டம் தீட்டி 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில், 7 இராணுவ அதிகாரிகளுக்கு உயிரிழப்பை ஏற்படுத்தியதுடன் மேலும் 10 பொதுமக்களுக்கு கடும் காயம் ஏற்படுத்தினார் என்று குற்றம் சுமத்தப்பட்டு, கனகரத்தினம் ஆதித்தியன் மற்றும் இருவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது கனகரத்தினம் ஆதித்தியன் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா,

சிவனேசதுரை சந்திரகாந்தனுக்கு எதிராக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கத்தைக் கொலை செய்தார் எனப் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை பிரதான சான்றாகக் கொண்டு மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட கொலை வழக்கில் குற்றஒப்புதல் வாக்கு மூலம் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட பின்னர் அவருக்கு, சட்டமா அதிபரின் சம்மதத்துடன் நீதிமன்றால் பிணை வழங்கப்பட்டது. சட்டமா அதிபர் வழக்கைத் தொடர்ந்து நடத்தவில்லையென நீதிமன்றுக்கு தெரியப்படுத்தினார். இதனையடுத்து சந்திரகாந்தனும் ஏனைய 4 கைதிகளும் விடுதலை செய்யப்பட்டார்கள்.

ஆனால் இந்த வழக்கில் சட்டமா அதிபரால் கனகரத்தினம் ஆதித்தியனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுப் பத்திரத்தில் முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நீதிமன்றால் 2019ஆம் ஆண்டு நிராகரிக்கப்ப ட்ட போதிலும் கனகரத்தினம் ஆதித்தியனுக்கு இன்று வரை பிணை வழங்கப்படவுமில்லை விடுதலை செய்யப்படவுமில்லை.

2015ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட சந்திரகாந்தனுக்கு 5 ஆண்டுகளில் வழங்கப்பட்ட நீதி பாதுகாப்பு அமைச்சரின் தடுப்புக்காவல் உத்தரவுக்கு அமைய 2009ஆம் ஆண்டிலிருந்து 12 ஆண்டுகளாக தனிமைப்படுத்தப்பட்டு மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒரேயொரு கைதியான ஆதித்தியனுக்கு வழங்கப்படவில்லை.

ஒரேயொரு குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை அடிப்படையாகக் கொண்டு சட்டமா அதிபரால் மூன்று வழக்குகள் மேல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மூன்று வழக்குகளில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டது எனத் தாக்கல் செய்யட்ட இரு வழக்குகளிலும் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் நிராகரிக்கப்பட்ட பின்னர் வழக்கை தொடர்ந்து நடத்த அரச தரப்பால் வேறு சாட்சியங்கள் முன்வைக்கப்படாமையால் எதிரியாகிய கனகரத்தினம் ஆதித்தியன் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

மூன்றாவது வழக்கான பாகிஸ்தான் தூதுவர் கொலை முயற்சி வழக்கில், ஆதித்தியனால் சுயவிருப்பத்தில் வழங்கப்பட்டது என அரச தரப்பால் முக்கிய சான்றாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலம்; சுயமாக எதிரியால் வழங்கப்படவில்லையென நீதிமன்றத்தால் கட்டளை வழங்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்துவிட்டதுடன் கனகரத்தினம் ஆதித்தியனுக்கு எதிராக வேறு எந்தச் சாட்சியங்களும் இல்லாத நிலையில் விடுதலை செய்யப்படாமல் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று நீதிமன்றில் தனது வாதத்தை முன்வைத்தார்.

அரச தரப்பினதும் எதிரி தரப்பினதும் வாதப் பிரதிவாதங்களையடுத்து சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை நீதிமன்றுக்கு அறியத்தரவும் மேலதிக விசாரணைக்காகவும் மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சி ஆகக் குறைந்த தவணைத் தினமாக 2021 ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார். (ஒ-இ)

# சுற்றறிக்கைக்கு முரணாக அதிபர்கள் இடமாற்றம்!

## ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

**வவுனியா, பெப்.6**

சுற்றறிக்கைக்கு முரணாக அதிபர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா செயற்பாட்டாளர்கள் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது;

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் 13 அதிபர்களுக்கு தங்களின் அனுமதியுடன் மாகாணக்கல்விப் பணிப்பாளரால் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி இடமாற்றங்களில் வடக்கு மாகாணசபையின் சுற்றறிக்கை 9/2015 குறிப்பிட்ட அதிபர் இடமாற்ற சபையை நிறுவி இடமாற்றங்கள் வழங்கப்படாததுடன் அதிபர் வெற்றிடம் நிரப்புதல் தொடர்பான 2008/4 சுற்றறிக்கை மீறப்பட்டுள்ளது. தரம் 1, அதிபர்கள் இருவரை ஒரே பாடசாலையில் நியமித்தமை, தரம் 2 அதிபர்கள் இருவரை ஒரே பாடசாலையில் நியமித்தமை, 2008/4 சுற்றுநிருபத்துக்கு அமைவாக அதிபர் ஓய்வுபெறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படாமை, கிராமப்புற பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிக்காது நகரப் பாடசாலைகளில் அதிபர்களை நியமித்தமை. மேற்படி முறையற்ற காரணங்களை அடிப்படையாகக்கொண்டு வழங்கப்பட்ட இடமாற்றமானது "அதிபர்கள் ஆளணிச்சீராக்கம் சேவையின் தேவைகருதிய இடமாற்றம் 2021" எனத் தலைப்பிடப்பட்டுள்ளமை பொருத்தமற்றதாக இருப்பதுடன் கல்விச்சமூகத்தை ஏமாற்றுவதாக கருதக்கூடியதாக உள்ளது - என்றுள்ளது. (ஐ-110)

# கொரோனா சு.காவை தாக்காதா?

## விந்தன் கேள்வி

யாழ்ப்பாணம், பெப்.6

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடியலையும் தாய்மாரை தாக்கும் கொரோனா, அமைச்சர் தயாசிறி ஜெயசேகரவையோ அல்லது சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரையோ தாக்காதா? என்று வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்; காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி அவர்களின் உறவினர்கள் இலங்கையின் சுதந்திர தினமான நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர். அங்கு வந்த பொலிஸார் கொரோனாத் தொற்று ஏற்படலாமெனத் தெரிவித்து அவர்களது அகிம்சை வழிப் போராட்டத்தைத் தடுக்க முற்பட்டனர். ஆனாலும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தாய்மார் போதிய சமூக இடைவெளியைப் பேணி முகக்கவசம் அணிந்திருந்தனர். அதேவேளை நல்லூர் கோவில் வீதியில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டில் கொரோனா பற்றியெல்லாம் பொருட்படுத்தாமல் ஊர்வலமொன்று நடத்தப்பட்டிருந்தது. அமைச்சர் தயாசிறி ஜெயசேகர, இராணுவப் புலனாய்வாளர்கள், மற்றும் வாள் வெட்டு குழுவினர் மற்றும் ஆவா குழுவினரென பலரும் குறித்த ஊர்வலத்தில் பங்கெடுத்திருந்தனர். அவர்களை கொரோனா தாக்காதென்பதை பொலிஸார் கண்டறிந்துள்ளனர். அதனால் அவர்களது ஊர்வலத்தை நிறுத்துமாறு பொலிஸார் கேட்கவில்லை. அதேபோன்று வீரசிங்கம் மண்டபத்தில் கட்சிக் கூட்டம் மண்டபம் நிறைந்து நடத்தப்பட்டுள்ளது. அங்கும் கொரோனா வந்தடையாதென்பதை பொலிஸார் கண்டறிந்துள்னர் - என்றார். (ப-20)

## தென்மராட்சியில்

# 35 வயதுக்கு மேற்பட்டோருக்கு தொற்றாநோய் பரிசோதனை!

சாவகச்சேரி, பெப்.6

சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் தென்மராட்சி பிரதேசத்திலுள்ள அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் 35 வயதுக்கு மேற்பட்ட அலுவலர்களுக்கு தொற்றாநோய் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பரிசோதனையில் தொற்றாநோயுடன் இனங்காணப்படுபவர்கள் மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி மருத்துவமனைக்கு அனுப்பப்படுகின்றனர்.

கடந்த 27 ஆம் திகதி தென்மராட்சி பிரதேச செயலகத்தில் மேற்கொண்ட பரிசோதனையில் 88 அலுவலர்களுக்கும், 29 ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச சபையில் மேற்கொண்ட பரிசோதனையில் 44 அலுவலர்களுக்கும் பரிசோதனைகள் செய்யப்பட்டன.

பரிசோதனையில் தொற்றாநோய்களான நீரிழிவு, இரத்த அழுக்கம், உள்ளிட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (ற-9)



மட்டுவில் வடக்கு லூர்த்து அன்னையின் பெருநாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (ற-159)

# அம்பகாமம் காட்டுப் பகுதியில் மணல், மரக்கடத்தல்கள் அமோகம்!

## தடுக்குமாறு மக்கள் கோரிக்கை

**அம்பகாமம், பெப்.6**

**அம்பகாமம் காட்டுப்பகுதியில் தொடர்ந்தும் இரவு வேளைகளில் சட்டவிரோதமான முறையில் காட்டுமரங்களும், ஆற்று மணல்களும் கடத்தப்பட்டு வருகின்றன.**

இந்தக் காட்டுப் பகுதியின் அருகிலிருக்கும் கிராமங்களான புலிமச்சி நாதக்குளம், தச்சமடம்பன், கரிப்பட்டை முறிப்பு போன்ற கிராமங்களினூடாக இரவு வேளைகளில் டிப்பர் ரக வாகனங்களில் சட்டவிரோதமான முறையில் இவை கொண்டு செல்லப்படுகின்றன என்று கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஒட்டுசுட்டான்- மாங்குளம் வீதியிலிருக்கும் 9 ஆம் கட்டைக் கிராமத்தினூடாக இந்தச் சட்ட விரோத செயற்பாடுகள் நடைபெற்றிருந்த நிலையில், அந்தப் பகுதி மக்கள் மணல் கடத்தலுக்கு வாகனங்கள் சென்று வரும் காட்டுப் பாதையில் பைக்கோ இயந்திரத்தைக் கொண்டு கிடங்கு வெட்டி போக்குவரத்துத் தடையை ஏற்படுத்தினர்.

இதனால் சிறிது காலம் தடைப்பட்டிருந்த மணல் அகழ்வு மீண்டும் தமது கிராமங்களூடாக நடைபெறுகின்றது எனக் கரிப்பட்டை முறிப்பு கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

பகல் வேளையில் காட்டுப் பகுதியில் மரம் வெட்டும் வாள் இயந்திரங்களின் சத்தம் கேட்கின்ற நிலையில், வெளியிடங்களில் இருந்து வரும் டிப்பர் வாகனங்களில் மணலையும் மரத்தையும் சட்டவிரோதமாக கொண்டு செல்கின்றனர்.


எமது வீட்டுத்தேவைகளுக்கு காட்டில் ஒரு சிறுதடியை வெட்டினால் கூட வனவளத் திணைக்களத்தினர் எங்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கும் தச்சமடம்பன் கிராம மக்கள், கரிப்பட்டை முறிப்புச் சந்தியில் இராணுவக் காவலரண் அமைந்திருக்கின்ற நிலையிலும் மாங்குளம் பொலிஸார் அடிக்கடி சுற்றுக் காவல்வரும் நிலையிலும் தடுப்பதற்கு ஆள்களின்றி தொடரும் இந்தச் சட்டவிரோத செயற்பாட்டைத் தடுத்து நிறுத்துமாறு தெரிவிக்கின்றனர். (ற-12)

## 14ஆவது குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், பெப். 6

கருகம்பனை தமிழ் மன்றம், சனசமூக நிலையம், இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் மற்றும் இந்து இளைஞர் கழகம் ஆகியன இணைந்து 14ஆவது முறையாக மாபெரும் குருதிக்கொடை நிகழ்வை நடத்த ஏற்பாடு செய்துள்ளன.

நாட்டில் தற்போது நிலவிவரும் கடுமையான குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் முகமாக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 3.30 மணிவரை கருகம்பனை பொது நூலகத்தில் இந்தக் குருதித் தான முகாம் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)



## சுதந்திர தினத்தையொட்டி குருதிக் கொடை முகாம்!

காங்கேசன்துறை, பெப்.6

நாட்டின் தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு, காங்கேசன்துறை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகமும், தையிட்டி கிழக்கு அன்னை வேளாங்கண்ணி இளைஞர் குழாமும் ஒன்றிணைந்து, குருதிக் கொடை நிகழ்வையும், இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வையும் நேற்றுமுன்தினம் நடத்தினர் என கழகத் தலைவர் லயன் கா.பீ.ஜெயவிந்தன் தெரிவித்தார்.

தையிட்டி கிழக்கு பகுதியைச் சேர்ந்த பார்வையில் குறைபாடு காணப்பட்டவர்களுக்கே இந்த மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுகள் தையிட்டி கிழக்கு அன்னை வேளாங்கண்ணி மாதா ஆலய மண்டபத்தில் இடம்பெற்றன. (ற-9)



## வடக்கு ஆளுநரால் நூலகம் திறப்பு!

கிளிநொச்சி, பெப். 6

கிளிநொச்சி மாவட்டச் செயலக வளாகத்தில் அமைக்கப்பட்ட நூலகம் வடமாகாண ஆளுநரால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் நிகழ்வின் ஒரு பகுதியாக மேற்படி நூலகத்தைத் திறந்து வைத்தார். (ம-6)

## அரச தரப்பினரின் ஆதரவுடன் இரவு பகலாக மணல் அகழ்வு

### கவலை தெரிவிக்கும் மக்கள்

கொடிகாமம், பெப்.6

நாவற்குழி- வேலம்பிராய் பகுதியில் ஆறு மாத காலமாக அரச தரப்பைச் சேர்ந்தவர்களின் ஆதரவுடன் சிலர் இரவு பகலாக மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர் என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நாவற்குழி வேலம்பிராய், தச்சன்தோப்பு மற்றும் தென்னந்தோட்டம் கடற்கரை ஆகிய பகுதிகளிலேயே மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. இதனால் அப் பகுதியிலுள்ள நெல் வயல்கள் மற்றும் குடியிருப்புகளுக்குள் வெள்ளம் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் மக்கள் தெரிவித்தனர்.

கொரோனாவுக்குப் பின்னர் மணல் அகழ்வு அதிகரித்துள்ளது எனச் சுட்டிக்காட்டிய அவர்கள், முறையிட வேண்டியவர்களின் உதவியோடே மணல் அகழ்வில் ஈடுபடுகின்றோம் என குறித்த செயற்பாட்டில் ஈடுபடும் நபர்கள் மக்களுக்கு நேரடியாகவே தெரிவித்தனர் எனவும் இது தொடர்பில் இனி யாரிடம் முறையிடுவது என்ற குழப்பத்தில் நாம் உள்ளோம் எனவும் தெரிவித்தனர். (வ-159)

## நோய்களிலிருந்து விடுபட விசேட பூசை வழிபாடுகள்

யாழ்ப்பாணம், பெப். 6

உலகத்தில் வாழும் அனைத்து மக்களும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும், அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி இன்று சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் சங்கானை வளக்கம்பரை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும். (ய)

## நயினாதீவுக்கு அரைமணி நேரத்துக்கு ஒரு படகுச் சேவை

நயினாதீவில் இருந்து குறிகட்டுவானுக்கு அரை மணித்தியாலத்துக்கு ஒரு படகுச் சேவை என்ற அடிப்படையில் படகுச் சேவைகளை வழங்க தனியார் படகு உரிமையாளர்கள் சங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அதன்படி நேற்றுமுதல் அந்தப் படகுச் சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தினமும் நயினாதீவில் இருந்து காலை 6:30 மணிக்கு படகுச் சேவைகள் ஆரம்பமாகி மாலை 5 மணிவரை இடம்பெறும், அதேபோல் குறிகட்டுவானில் இருந்து காலை 7 மணி முதல் மாலை 6 மணிவரை படகுச் சேவைகள் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

சங்கானை, பெப். 6

யாழ். சங்கானை பிரதேச மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பிரதேச மருத்துவமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இக்கூட்டத்துக்கு பிரதேச மக்கள் அனைவரும் சமூக இடைவெளியைப் பேணி, முகக்கவசம் அணிந்து தவறாது கலந்து கொள்ளவும் என மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார். (ய)

## இருளில் மூழ்கியுள்ளது யாழ்.செம்மணிச் சந்தி

### பயணிகள் சிரமம்

யாழ்பாணம், பெப். 6

யாழ்ப்பாணம்- கண்டி வீதியின் முதன்மைச் சந்தியான செம்மணிச் சந்தி இரவு நேரங்களில் இருளில் மூழ்கியுள்ளதால் அந்த வீதியூடாக இரவு நேரங்களில் பயணம் செய்வோர் அசௌகரியங்களைச் சந்திக்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே போக்குவரத்து அதிகமுள்ள நகரப்பகுதியில், முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடத்தில் தெருவோர மின் விளக்குகளைப் பொருத்துவது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென பயணிகள் தெரிவித்தனர். (ப-ரி1,12)

# ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையையும் ஆணைக்குழு ஆராயும்

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.6**

**ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் உள்ள விடயங்கள் தொடர்பிலும் ஜனாதிபதி ஆணைக் குழு ஆராய்ந்து, அவ்வறிக்கையில் முக்கிய பரிந்துரைகள் இருக்குமானால் அவை ஏற்றுக்கொள்ளப்படும்.**

இவ்வாறு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; மனித உரிமை விவகாரம் தொடர்பில் கடந்த காலங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. ஆராய்வதற்கெனக் குழுக்களும் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றால் முன்வைக்கப்பட்ட அறிக்கைகளை எடுத்து, புதிதாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழு ஆராயும். அதில் உள்ள பரிந்துரைகளும் கவனத்தில் கொள்ளப்படும். இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளில் நிறைவேற்றப்பட்ட விடயங்கள் எவை, நிறைவேற்றப்படாத விடயங்கள் எவை, எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய திட்டங்கள் எவை என்பது தொடர்பில் ஆராயப்பட்டு பரிந்துரை அறிக்கை முன்வைக்கப்படும். அது மட்டுமல்ல ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் விமர்சனங்கள் இருந்தாலும், அவ்வறிக்கையிலுள்ள விடயங்களும் ஆராயப்பட்டு, முக்கியமான விடயங்கள் இருப்பின் அவற்றை நாம் ஏற்கவேண்டும். ஏனெனில் சர்வதேச சமூகம் இதனையே எதிர்பார்க்கின்றது. காலத்தைக் கடத்தும் நோக்கில் ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்படவில்லை. காலம் கடந்தேனும் உண்மையான நோக்கிலேயே அந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட பின்னர் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் -என்றார். (ப-44)

கிழக்கு முனைய விவகாரம்

# வாக்குறுதிகளை இலங்கை அரசு பின்பற்ற வேண்டியது அவசியம்

## இந்தியா மீண்டும் அழுத்தம்

கொழும்பு, பெப்.6

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பாக இலங்கை, தனது சர்வதேச வாக்குறுதிகளைப் பின்பற்ற வேண்டியது மிகவும் அவசியம் என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அனுரக் ஸ்ரீவத்சவ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா, இலங்கை மற்றும் ஜப்பான் அரசாங்கங்கள், கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்திசெய்து இயக்குவதற்காக கடந்த 2019 மே மாதம் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டமை அனைவரும் அறிந்த விடயமாகும். துறைமுகம் மற்றும் எரிசக்தி போன்றவற்றில் இலங்கையின் உள்கட்டமைப்புகளை இந்தியா மற்றும் சீனாவின் முதலீடுகளுடன் அபிவிருத்தி செய்வது, பரஸ்பர நன்மையளிக்கக் கூடிய விடயமாகக் காணப்படும் என நாங்கள் நம்புகின்றோம். ஆகவே இவ்விடயம் தொடர்பாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார் -என்றார். (வ-இ)

# தமிழ் பேசும் மக்களை போராட தள்ளுகிறது அடக்குமுறை அரசு

## மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.6

தமிழ் பேசும் இலங்கையர்களின் தேசிய இருப்பை அழித்தொழிக்கும், ஒடுக்குமுறை ராஜபக்ச அரசு, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை ஜனநாயகப் போராட்டங்களை நோக்கித் தள்ளிவிட்டுள்ளது என கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நடப்பு ராஜபக்ச அரசின் 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற கூச்சல் நடைமுறையில், 'ஒரே மொழி,ஒரே மதம், ஒரே இனம்' என்பதில் வந்து நிற்கிறது. இதை நாம் இன்று தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளோம். இந்த ஏகபோக கொள்கையை நாம் ஒருபோதும் ஏற்க முடியாது. இதை இந்நாட்டு அரசும், உலகமும் புரிந்து கொள்ள வேண்டும். உண்மையில் ஒளிவு மறைவு இல்லாமல் இதை இந்த அரசு செய்வதை எண்ணி நாம் மகிழத்தான் வேண்டும். உள்ளொன்று வைத்து புறமொன்று செய்யவில்லையே இவர்கள். இந்நிலையில் அனைத்து ஜனநாயக சக்திகளையும் அணிதிரட்டி இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக, இந்நாட்டில் எமது இருப்பை உறுதிசெய்து கொள்ள நாம் போராட வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த தேசிய ஜனநாயகப் போராட்டம் இப்போது ஆரம்பித்திருப்பதை எண்ணி மகிழ்கிறேன். இந்த இலங்கைத் திருநாடு, 'பன்மொழி, பலமத, பல்லின' அடிப்படையைக் கொண்ட பன்மைத்துவ நாடு என்ற இலக்கு அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படும் வரை இந்தப் போராட்டம் தொடர வேண்டும். இந்த நாட்டின் வரலாற்றில் தமிழ் மக்களுக்கு இருக்கின்ற பங்கும், இன்றைய இலங்கை நாட்டின் ஆட்சியுரிமை மற்றும் இறைமை ஆகியவற்றில் தமிழ் பேசும் மக்களுக்கு இருக்கின்ற மறுக்கப்பட முடியாத உரிமையும் உறுதிப்படுத்தப் படும்வரை இப்போராட்டம் தொடர வேண்டும் என்றுள்ளது. (ப)

# 24 மணிநேரத்தில் 16 பேர் கைதாகினர்

கொழும்பு, பெப்.6

கொரோனா சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறிய 16பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்றுக் காலை 6மணியுடன் முடிவடைந்த 24 மணிநேர காலப் பகுதியில் இவர்கள் கைதாகினர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார். முகக்கவசம் அணியத் தவறிய குற்றச்சாட்டிலேயே இவர்களில் பெரும்பாலானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் மொத்தம் 2 ஆயிரத்து 997 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறுகின்றவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# கோழிகளை எடுத்துச் சென்ற பொலிஸ் கைது

கொழும்பு,பெப்.6

பண்ணையிலிருந்து வலுக்கட்டாயமாக இரு கோழிகளை எடுத்துச் சென்ற குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

திஸ்ஸமஹராம- கங்காசிறிபுரவில் உள்ள கோழிப் பண்ணை உரிமையாளரால் மேற்கோள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இவர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரை திஸ்ஸமஹராம நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய போது அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையிலும் விடுவிக்கப்பட்டார். (ஐ-இ)

# 134 குடும்பங்களுக்கு நில ஒதுக்கீட்டுக் கடிதம்

கொழும்பு, பெப்.6

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, 2014 ஆம் ஆண்டு மீரியாபெத்த தோட்டத்தில் இடம்பெற்ற நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட 134 குடும்பங்களுக்கு நில ஒதுக்கீட்டு ஒப்புதல் கடிதம் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

இந்தக் குடும்பங்களுக்கு நிலஅளவீட்டுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வரைபடமும், தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையத்தின் அனுமதியுடன் புதிய காணிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் மேஜர் சுதந்த ரணசிங்க, பதுளை அரச அதிபர், ஹல்துமுல்ல பிரதேச சபைத் தலைவர் அசோக் குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற-இ)

# லஞ்சத்துடன் சிக்கிய சுகாதாரப் பரிசோதகர்

கொழும்பு, பெப்.6

கோட்டை மாநகர சபையின் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். 10 ஆயிரம் ரூபாவை லஞ்சமாகப் பெற முற்பட்ட போது அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். நாவல பகுதியைச் சேர்ந்த ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# கொன்சியூலர் அலுவலகம் இன்று கண்டியில் திறப்பு

கொழும்பு,பெப்.6

வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் வழிகாட்டுதலின் கீழ், பொதுமக்களுக்கு வழங்கும் சேவைகளின் செயற்றிறனையும், செயலாண்மையையும் மேம்படுத்தும் நோக்கில் பிராந்திய கொன்சியூலர் அலுவலகமொன்று திறக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு கண்டி மாவட்டத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

மத்திய மாகாணம் மற்றும் அதன் அண்மித்த பகுதிகளில் உள்ள பொதுமக்கள் கொழும்பில் உள்ள வெளிநாட்டு அமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவுக்குச் செல்லாமல் இந்த கொன்சியூலர் அலுவலகம் மூலம் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-இ)

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க பணியாளர் திரு க.லோகேஸ்வரன்
அவர்களின் அன்புத் தாய்

**திருமதி அரியமலர் கந்தையா**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்**
**யாழ்.மாட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)**
**திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
20 . 03 . 1937



மறைவு
19 . 01 . 2020

**அமரர் திருமதி ஐஸ்வரியம் செல்லத்துரை**
**திதி - 06.02.2021**

ஆண்டு ஒன்று கடந்து போனாலும்
ஆறவில்லை எம் துயரம்
அதிர்ந்து பேசி அறியாத அன்பு வடிவமே
பாசத்தின் உறைவிடமாய் பண்பின் இலக்கணமாய்
வாழ்ந்து வழிகாட்டிய அன்பு அன்னையே
நீங்கள் வாழ்ந்த இடம் வனப்பிழந்து போனது
வாழும் வரை உங்கள் நினைவில் நாங்கள்

**நாகம்மாள் கோவில் வீதி,**
**உடுவில் கிழக்கு, சுன்னாகம்.**
**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்
13 . 02 . 1936



விண்ணில்
07 . 01 . 2021

**அமரர் திசைவீரசிங்கம் ரூபசிங்கம்**
**(ஓய்வுபெற்ற நில அளவை படவரைஞர்)**

கடந்த 07.01.2021 இறைபதம் அடைந்த எமது குடும்ப தலைவரின் பிரிவுச் செய்தி அறிந்து உடன் வருகை தந்து ஆறுதல் பகிர்ந்து உதவிகள் செய்த உறவினர்கள், அயலவர்கள் மற்றும் நண்பர்களிற்கு உளம் நிறைந்த நன்றிகள். மற்றும் தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மற்றும் அஞ்சலி பிரசுரங்கள் ஊடாக துயர்பகிர்ந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (06.02.2021) சனிக் கிழமை எமது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அந்தியேட்டி நிகழ்வும் நடைபெற உள்ளது.

**20 (12), முருகன்பதி,**
**பரமேஸ்வரா வீதி,**
**திருநெல்வேலி தெற்கு,**
**யாழ்ப்பாணம்.**
**குடும்பத்தினர்.**

## தனிமைப்படுத்தலில் 18 குடும்பங்கள்

திருகோணமலையிலிருந்து, தென்மராட்சி மீசாலை மேற்குக்கு வந்த பெண்ணுக்கு, எழுதுமட்டுவாழ் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதனையடுத்து அவர் சென்று வந்த 10 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 18 குடும்பங்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளன.

மண்டுவில், மட்டுவில் வடக்கு, மீசாலை மேற்கு, சங்கத்தானை, கோயிற்குடியிருப்பு, மந்துவில், அல்லாரை வடக்கு, மிருசுவில் வடக்கு, கச்சாய், மற்றும் 'உசன் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 18 குடும்பங்களைச் சேர்ந்த 45 பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தக் குடும்பங்களுக்கு பிரதேச செயலகத்தால் முதற் கட்டமாக 5 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (க-9)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்: 1946.08.14
மறைவு: 2021.02.03

எமது பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திரு.சுப்பிரமணியம் காமினி**
அவர்களின் அன்புத் தாய்

**சுப்பிரமணியம் பிள்ளையம்மா**

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலரும்**
**உத்தியோகத்தர்களும்**
**உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்**
**பிரதேச செயலகம் வேலணை.**

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
15 . 08 . 1935



இறப்பு
06 . 02 . 2020

**அமரர் செல்லத்துரை இரத்தினம்**


கண்ணிமைக்கும் பொழுதில்
சடுதியாய் மறைவீர்கள் என நினைக்கவில்லையே.
உங்களை மீண்டும் ஒரு முறை காண
மனம் ஏங்குதே அம்மா!

**65/7, மாட்டின் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
T.P: 077 968 9444

**மக்கள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு
15 . 10 . 1928



இறப்பு
31 . 01 . 2021

**கனகசபை தியாகராஜா**

Bentong, Malaysia வைப் பிறப்பிடமாகவும், காரைநகர், கல்வியங்காடு, New Malden, UK ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை தியாகராஜா அவர்கள் 31.01. 2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கனகசபை, ராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, மங்கயற்கரசி தம்பதிகளின் அன்பு மருமகனும், ராஜ நாயகி அவர்களின் பாசமிகு கணவரும், நளாயினி, கருணாநந்தன், பவானி, சாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மராஜ், ஷார்மினி, விவேகானந்தன், தெட்சணா மூர்த்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், தக்ஷாயினி, சஞ்சீவ், கேஷினி, மாதங்கி, ஹர்ஷினி, காயத்ரி, ஹரி ஆகியோரின் பாசமிகு பேரனும், கியன் இன் பூட்டனும், ராஜேஸ் வரன், நவமணி, காலஞ்சென்றவர்களான கணேஷன், சிதம்பரநாதன், பாலசுப்ர மணியம், கருணாகரன், ஆனந்தராஜா, நாகரத்தினம், கோபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். இவர்களுடன் மைத்துனர்கள், மைத்துனிகள், பெறாமக்கள், பேரன்மார், பேத்திமார் மற்றும் உறவினர்களும் நண்பர்களும் ஆழ்ந்த துயரத்தில் மூழ்கியுள்ளார்கள். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். COVID 19 தொடர்பான கட்டுப்பாடுகளின் நிமிர்த்தம் நெருங்கிய உறவினர்கள் மட்டுமே இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ளலாம் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**தொடர்புகளுக்கு:**
பவானி - மகள் Mobile : +44 7533 699 249
சாந்தினி - மகள் Mobile : +44 7799 692 733
நளாயினி - மகள் Mobile: +61 498 576 682
கருணாநந்தன் - மகன் mobile: +61 433 438 685
சந்திரமோகன் - மைத்துனர் : +94 7667 53124

**கிரியை** : Monday, 8 Feb 2021 7:00 am (UK time)
At Angel Funeral Parlour
**தகனம்** : Monday, 8 Feb 2021 10:00 am (UK time)
At Putney Crematorium

**தகவல்: சந்திரமோகன்**
**(மைத்துனர்)**

## 500 மில்லியன் தடுப்பூசிகள்: செஞ்சிலுவைச் சங்கம் கொள்வனவு

கொழும்பு, பெப். 6

வறிய நாடுகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் 500 மில்லியன் தடுப்பூசிகளை கொள்வனவு செய்யும் பணியை ஆரம்பித்துள்ளது.

அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டுள்ள தடுப்பூசிகளில் 115 மில்லியன் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுவிட்டன. செல்வந்த நாடுகளுக்கே அதிக தடுப்பூசிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-இ)

## போதைப்பொருளுக்கு அடிமையாவதை தடுக்க வருகின்றது விசேட செயற்றிட்டம்

### அமைச்சுகள் இணைந்து நடவடிக்கை

கொழும்பு, பெப். 6

பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாவதைத் தடுப்பதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சும், கல்வி அமைச்சும் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்றை செயல்படுத்தவுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகின்றனர். இதைத் தடுப்பதற்கான திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று விசேட கலந்துரையாடல் நடைபெற்றது. அதன் பின்னர் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் தற்போது 90 ஆயிரம் தொடக்கம் ஒரு லட்சம் பேர் வரை போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர். இவர்களின் தொகை படிப்படியாக அதிகரித்துச் செல்கின்றது. இந்த நிலைமைக்கு பிரதான காரணம் இளம் வயதினர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி வருகின்றமையே என்று கலந்துரையாடலில் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

இந்தநிலையில் இளம் வயதினரைப் போதைப்பொருள் பாவனையிலிருந்து மீட்பதென்றால், பாடசாலை மட்டத்திலிருந்தே அவர்களுக்கு போதைப்பொருள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் என்று கலந்துரையாடப்பட்டது. அதற்கமைய ஒன்றிணைந்த வேலைத்திட்டமொன்றை செயற்படுத்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தச் செயற்பாடுகளுக்கு சாரணியர் அமைப்பினரும், இலங்கைச் செஞ்சிலுவை அமைப்பினரும் தேசிய மாணவர் படையணியும் ஒத்துழைப்பு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன என்று பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

(த-இ)

# VACANCIES

**●Marketing Manager**

**Basic Requirements**

- A Bachelors degree in any field or work experience.
- Excellent communication skills – written & oral (English essential).
- Age below 35 years.

We are expecting energetic individual with more than two years of experience in the same Industry to join our team. Attractive remuneration package. Await for the suitable candidate.

Email your CV:

**slshree7@gmail.com before 10th February 2021**

Human Resource Department
**Shree Infrastructure (Pvt) ltd**
No: 218 Stanly road, Jaffna.
**021 4300505**

## மணமகள் தேவை

கனடாவில் நிரந்தரக் குடியுரிமையுடைய, யாழ். கத்தோலிக்க உயர் கௌரவ குடும்பம். 42 வயதான மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புக்கு:
**0014169041975** (வைபவர் & வட்ஸப்)

## வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ/து)
## பதிவுத்திகதி 1971.01.09 பதிவு இல VA/260
## கீழ் வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**01. பதவி : கிராமிய வங்கி முகாமையாளர்**
சம்பளக்குறி இல- 205/09
4/2018 இன் படி சம்பள அளவுத்திட்டம்
: 18010 - 220 X 10 - 230 X 10 - 22510

**கல்வித் தகைமைகள்:-**

அ). கூட்டுறவு பணியாளர் 10வது சம்பளத்திட்ட கிராமியவங்கிப் பகுதி பதவி ஒன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவு பணியாளர் 11வது சம்பளத்திட்ட அப்படிப்பட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ). இலங்கை வங்கியாளர் நிறுவன வங்கி அலுவல்கள் பற்றிய பரீட்சையில் டிப்ளோமா சான்றிதழ் பகுதி- 1 உடன் வங்கி அலுவல்கள் பற்றிய மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ). அங்கீகரிக்கப்பட்ட அல்லது பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் வர்த்தக வங்கி அலுவல்கள் பற்றி இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஈ).கூட்டுறவு பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் வங்கி பகுதி அல்லது கிராமிய வங்கிப் பகுதி மேற்பார்வை மட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**2. பதவி : உற்பத்தி முகாமையாளர்**
சம்பளக்குறி இல - 107/10
4/2018இன் படி சம்பள அளவுத்திட்டம்
: 17605 - 198 X 10 - 220 X 10 - 21785

**கல்வித் தகைமைகள்:-**

அ). கூட்டுறவு பணியாளர் 11வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறையிலான முகாமை மட்ட அல்லது மேற்பார்வை மட்ட பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 12வது சம்பளத்திட்ட அப்படிப்பட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ).அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் வர்த்தகம் அல்லது வியாபார நிர்வாகம் அல்லது பொருளியல் ஆகியவற்றில் விசேட பட்டம் அல்லது அதற்கு சமனான தகைமைகள்.

அல்லது

கூட்டுறவு பணியாளர் ( உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் உற்பத்தி துறை சந்தைப்படுத்தல் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றில் மேற்பார்வை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**01 தொடக்கம் 02 வரையான பதவிகளுக்குமான பொதுவான நிபந்தனைகள்**

1. பதவியின் தன்மை - நிரந்தரமானது.
2. வயதெல்லை - 18 -45 (தற்போது சேவையில் உள்ள கூட்டுறவு ஊழியர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.)
3. விண்ணப்படிவம் சுயமாக தயாரித்து பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.
4. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித்திகதி - 20.02.2021
5. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :-
   தலைவர்
   வ.ப.நோ.கூ.சங்கம்.
   பொதிமண்டப வீதி.
   வவுனியா.
6. ஊழியர்க்கான சலுகை :- கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக இதர படிகள் இயக்குனர் சபைத் தீர்மானத்திற்கு அமைவாக வழங்கப்படும்.

தலைவர்
வ.ப.நோ.கூ.சங்கம்.
வவுனியா

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி- 45ரூபாய்
தொடர்புகளுக்கு:- **077 334 1281**

## வேலையாட்கள் தேவை

Photo Shop, Receptionist (வரவேற்பாளர்கள்) போன்ற வேலைக்கு வேலையாட்கள் தேவை.
தொடர்பு:- **077 551 3375**

## நாகபூஷணி திருமண சேவை

**பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்**
மணமகள்களுக்கு மட்டும் (06.02.2021 முதல் 09.02.2021 வரை)
உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் தரப்படும்.
**இல. 5, ஐந்தாம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 077 138 7596**

## தவறிவிட்டது

யாழ் நாவலர் வீதிக்கும் ஆரியகுளத்துக்கும் இடையில் சூரியகுமார் சூரியதாஸ் எனும் பெயருடைய தேசிய அடையாள அட்டை (921562578 V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அண்ணாமலை- நல்லைக்கந்தன் மோட்டார் சைக்கிள் திருத்துமிடம் 211.நாவலர் வீதி. யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.
**076 279 3312**

## தவறவிடப்பட்டுள்ளது

4.2.2021 அன்று பி.ப 4.00 - 6.00 மணி வரைக்குள் நாயன்மார்கட்டு வீதி, குளத்தடியில் பை (Purse) ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. அந்தப் பையினுள் NIC (921363389V), ATM Card, Insurance, Tax and Doga ID என்பன உள்ளடங்கலாக தவறவிடப் பட்டுள்ளது.
தொடர்பு: **077 877 9428**



## மணமக்கள் தேவை

யாழ் இந்து, 1987, மிருகசீரிடம் 4ம் பாதம், சூரியன் செவ்வாய் 3ல், கிரகபாவம் 6, தனியார் நிறுவனமொன்றில் கணக்காளராக பணிபுரியும் மணமகனுக்கும், 1991, மூலம் 1ம் பாதம், செவ்வாய் 6ல், கிரகபாவம் $39\frac{1}{4}$, அரச பணிபுரியும் மணமகளுக்கும் பொருத்தமான மணமக்கள் தேவை.

**077 616 1739**

## மரண அறிவித்தல்

பிறப்பு 07 . 09 . 1954



இறப்பு 05 . 02 . 2021

### திருமதி இந்திரகுமார் சகுந்தலா

நறுவிலியடி, புலோலி தெற்கு, புலோலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திரகுமார் சகுந்தலா அவர்கள் நேற்று (05.02.2021) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அமரர்களான சின்னத்தம்பி பானுமதி தம்பதிகளின் பாசமிகு மகளும், இந்திரகுமார் (CTB ஓய்வு நிலை சாலை பரிசோதகர்) அவர்களின் பாசமிகு மனைவியும், இராசம்மா, இராசலிங்கம் (அமரர்) நேசலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரியும், பிரதீபா (கனடா), பிரசாந்தி (மருந்துக் கலவையாளர் PMCU-பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு தாயாரும், சுரேந்திரன் (கனடா), நிர்மலன் (அலுவலக பணியாளர் மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சியாமிகா, வினுசாந், தம்பி (அமரர்) ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், இரதிதேவி, இந்திரகுமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர் கரவெட்டி பிரதேச செயலகம்) ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (07.02.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.00மணியளவில் சைவக் கிரியைகள் ஆரம்பமாகி காலை 9.00 மணியளவில் அன்னாரது பூதவுடல் தகனக் கிரியைகளிற்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்து சென்று தகனம்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:குடும்பத்தினர்.**
**077 360 6190**

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### கொரோனாவை...

விலில் இருந்து பொலிகண்டிவரை மேற்கொள்ளப்படும் கவனவீர்ப்புப் பேரணிக்கு பொலிஸார் நீதிமன்றங்கள் ஊடாகத் தடை ஏற்படுத்த முயற்சிப்பது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அரசின் நெறிப்படுத்தலில் பொலிஸார் தமிழ் மக்களின் நியாயமான போராட்டங்களை கொரோனா தடுப்பு சட்ட விதிகளைப் பயன்படுத்தித் தடை செய்கின்றனர். எனினும் அரச ஆதரவுத் தரப்பினர் மேற்கொள்ளும் ஆர்ப்பாட்டங்களுக்கும், நிகழ்வுகளுக்கும் பொலிஸார் பாதுகாப்பு வழங்குகின்றனர்.

தற்போது தமிழ் மக்கள் தங்கள் நியாயபூர்வமான கோரிக்கைகளை முன்வைத்து நடத்தும் போராட்டத்துக்குத் தடை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகின்றது. எனினும் சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டதுக்கு பொலிஸார் எந்தத் தடையும் விதிக்கவில்லை. அதேநேரம் அமைச்சர் மூடிய மண்டம் ஒன்றில் பெரும் எண்ணிக்கையானோருடன் மேற்கொண்ட நிகழ்வுக்கும் தடை விதிக்கவில்லை.

தற்போது மாவட்டத்துக்கு மாவட்டம் வருவோரைத் தனிமைப்படுத்தத் தேவையில்லை என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. அதுவே தற்போதைய நடைமுறையாகவும் உள்ளது. அப்படியிருக்கும்போது கொரோனா சட்ட விதிகளைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் போராட்டங்களை முடக்க நினைப்பது நியாயமற்றது என்றும். மக்கள் தெரிவித்தனர். (எ)

### ஏசி....

டுத்து யாழ்ப்பாணம் நகரில் 4 கடைகள் மூடப்பட்டுள்ளன. 32 பேர் சுயதனிமைப்படுத்தப்ப ட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்தப் பணிக்கு என்று கடந்த மாதம் வந்தவருக்கு எழுதுமட்டுவாழில் பி.சி.ஆர். மாதிரி பெறப்பட்டது. அவருக்கு தொற்று உள்ளமை நேற்றுமுன்தினம் புதன்கிழமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் யாழ்ப்பாணம் நாக விகாரை விடுதியில் தங்கியிருந்தமையும் கண்டறியப்பட்டது.

அதனையடுத்து வங்கிக் கட்டட வேலைகள் நிறுத்தப்பட்டன. தொழிலாளிகள் சிலர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தொற்றாளர் சென்றார் என்று தெரிவிக்கப்பட்ட நாக விகாரைக்கு அண்மையில் உள்ள மருந்தகம் மூடப்பட்டு அங்கு பணியாற்றுபவர்கள் சுயதனிமைப்படுத்த ப்பட்டுள்ளனர்.

அவர் சென்றுவந்தார் என்று கூறப்படும் யாழ்ப்பாணம் வேம்படிச் சந்தியில் உள்ள உணவகம், மருத்துவமனை வீதியில் உள்ள ஐஸ்கிறீம் கடையுடன் கூடிய உணவகம் மற்றும் தண்ணீர் கடை ஒன்று ஆகியவையும் மூடப்பட்டு ள்ளன. இவ்வாறு மூடப்பட்ட நிறுவ ன ங்களில் பணியாற்றுபவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தொற்று இல்லை என அறிக்கை கிடைத்தால் நிலையங்களைத் மீளத்திறக்க அனுமதிக்கப்படுவார்கள் என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

(கு-26)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர் **திரு.இ.பாஸ்கரன்**
அவர்களின் அன்புத் தாய்
**ஜெகதீஸ்வரி இரத்தினவடிவேல்**



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்லஇறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிராந்திய முகாமையாளரும்**
**சக ஊழியர்களும்**
**பிராந்திய காரியாலயம் (வடக்கு)**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.**

**வேலைக்கு ஆட்கள் தேவை**
**Sales Rep** (விற்பனைப் பிரதிநிதி)
**Driver** (சாரதி)
யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா
**077 153 1167, 077 311 6489**

**நல்லூர் கந்தன் திருமண சேவை**
எல்லோருக்கும் பொருத்தமான வரன்கள் எம்மிடம் உள்ளன.
**077 973 3183**

## மரண அறிவித்தல்

பிறப்பு 14 . 05 . 1945



இறப்பு 05 . 02 . 2021

### திருமதி ஜெகதீஸ்வரி இரத்தினவடிவேல்

இல.11, ஐயனார் கோவில் வீதி, வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகதீஸ்வரி இரத்தினவடிவேல் நேற்று (05.02.2021) வெள்ளிக்கிழமை இறையடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு கண்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், இரத்தினவடிவேல் (முகவர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும், நிருபா (ஆசிரியை யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) பிரபாகரன் (லங்கா எரிபொருள் நிரப்பு நிலையம்) கஸ்தூரி (லண்டன்) காயத்திரி (ஜேர்மனி) பாஸ்கரன் (இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம்) தயாளினி (ஆசிரியை, யா/ கதீஜா பெண்கள் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரமேஷ் (நோர்வே) கௌரிபாலன் (லண்டன்), சிவகரன் (ஜேர்மனி), வித்தியகலா (கமநல சேவைகள் நிலையம் - உடுவில்) சாத்வீகன் (Maxus Marketing) ஆகியோரின் அன்பு மாமியாரும், நல்லம்மாவின் (கனடா, ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சற்குணசிங்கம் மற்றும் கிருஸ்ணசாமி, பரதராஜன் ஆகியோரின் மைத்துனியும் ஆரணி, அனிஷ், சங்கவி, ஆதவன், வாசவி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 221 7232**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றி நவிலலும்

தோற்றம் 26 . 09 . 1944



மறைவு 07 . 01 . 2021

### அமரர் சின்னமணி பூரணம்

கடந்த 07.01.2021 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று 06.02.2021 சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளாதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது துயரில் கலந்து கொண்டு தொலைபேசி ஊடாகவும், கண்ணீர் பிரசுரங்கள் மற்றும் தந்தி தொடர்பு மூலமாகவும் மற்றும் நேரில் வந்தும் ஆறுதல் கூறியவர்களுக்கும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இராச வீதி, தொகுதிப்பண்ணை,**
**கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.**

**குடும்பத்தினர்.**

## எண்மருக்கு.....

வரன் தெரிவித்தார்.

தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களில் 7 பேர் மன்னாரைச் சேர்ந்தவர்கள். அவர்களில் 6 பேர் முன்னர் தொற்றுடன் இனங்காணப்பட்டவர்களுடன் நேரடியாகத் தொடர்பில் இருந்தவர்கள். மற்றையவர் வீதித் திருத்தப் பணிகளில் ஈடுபடும் ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில் ஒருவர் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளார். இவர் பொலிஸ் உத்தியோகத்தர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## எழுச்சியுடன்....

கடந்த புதன்கிழமை பொத்துவிலில் இருந்து ஆரம்பித்த இந்தப் பேரணி, அன்றைய தினம் இரவு தாழங்குடாவில் தரித்தது. மறுநாள் தாழங்குடாவில் இருந்து ஆரம்பித்த பேரணி, அன்று இரவு திருகோணமலையில் தரித்தது. நேற்று அங்கிருந்து புறப்பட்ட பேரணி அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஊடாகச் சென்று முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் வழியாக வவுனியா நகரை நேற்றிரவு அடைந்தது.

நேற்றைய பேரணியில் பெரும் எண்ணிக்கையானவர்கள், 200க்கும் அதிகமான வாகனங்கள் சகிதம் பங்குகொண்டனர். பேரணி முல்லைத்தீவு நகர் சென்று அங்கிருந்து முள்ளிவாய்க்கால் நோக்கிச் சென்றது. பேரணி பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்துக்கும் சென்றது. அங்கும் கால்நடைப் பவனி நடந்தது.

பின்னர் முல்லைத்தீவு நகரில் இருந்து முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி வரை வாகனப்பேரணி சென்றது. முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. அதன்பின்னர் பேரணி புதுக்குடியிருப்பை நோக்கி நகர்ந்தது.

புதுக்குடியிருப்புக்குள் பேரணி நுழைய முயன்றபோது, புதுக்குடியிருப்புப் பொலிஸார் கொரோனாத் தடுப்பு சுகாதார நடைமுறைகள் அடங்கிய நீதிமன்றக் கட்டளையை வழங்கினர். அதனால் அங்கு சற்றுப் பரபரப்பு ஏற்பட்டது. எனினும் பேரணி தொடர்ந்தது. அதன்பின்னர் ஒட்டுசுட்டானுக்கு நகர்ந்து அங்கும் பேரணி நடைபெற்றது. அங்கிருந்து நகர்ந்த பேரணி நெடுங்கேணி சென்று அங்கிருந்து வவுனியா நகரை நோக்கிப் பயணித்தது. இரவு 8.30 மணியளவில் பேரணி வவுனியா நகரை அடைந்தது. இன்று காலை பேரணி மன்னார் நோக்கி விரையவுள்ளது. (எ-110,243,19)

## ஆணிகள்....

நேற்று திருமலையில் இருந்து பொலிகண்டி நோக்கி பேரணி நகர்ந்தது. இந்தப் பேரணி பயணிக்கும் வீதிகளில் ஆணிகள் வீசியெறியப்பட்டு பேரணிக்குத் தடை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புல்மோட்டையில் இருந்து முல்லைத்தீவு நோக்கிப் பேரணி பயணித்தபோது, வீதியில் எறியப்பட்டிருந்த ஆணிகளால், பேரணியில் பயணித்த வாகனங்களின் ரயர்கள் சேதமாகின. அதேவேளை, பேரணியில் பங்கேற்ற வாகனங்கள் சிலவற்றின் மீது சிறிமாபுர பகுதியில் வைத்துக் கல்வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனினும் தடைகளை மீறி, பேரணி உரிய இடம்நோக்கி நகர்ந்தது. (எ-26)

## போராட்டத்துக்கு...

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திட்டமிட்டு முன்னெடுக்கப்படும் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை கவனவீர்ப்புப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றது.

பெரும் மக்கள் ஆதரவுடன் - உணர்வெழுச்சியுடன் இந்தப் போராட்டம் தற்போது பொலிகண்டி நோக்கி நகர்ந்துவருகின்றது. நாளை ஞாயிற்றுக்கிழமை இந்தக் கவனவீர்ப்புப் பேரணி பொலிகண்டியை அடையவுள்ளது.

அந்தப் போராட்டத்துக்குத் தடை விதிக்கக்கோரி சாவகச்சேரி, மல்லாகம் நீதிமன்றங்களில் பொலிஸார் மனுத் தாக்கல் செய்திருந்தனர். அந்த மனுக்கள் நீதிமன்றங்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இந்தப் போராட்டத்துக்குத் தடை விதிக்கக் கூறி சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

பொதுத் தொல்லை ஏற்படுத்தல், கொவிட் 19 சுகாதார நடைமுறைகளை மீறுதல் போன்ற சட்ட ஏற்பாடுகளின் கீழ் பொலிஸார் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

ஜெனீவா மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடர் நடக்கவுள்ள நிலையில் நாட்டுக்குச் சதி ஏற்படுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் முயற்சிக்கின்றனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, "இலங்கை அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள ஒன்றுகூடல் உரிமையைப் பொலிஸாரின் தடை உத்தரவுக் கோரிக்கை மறுக்கின்றது. ஒரு இனம் நாட்டுக்குச் சதி செய்கின்றது எனப் பொலிஸார் எண்பிப்பது ஏனைய இனங்களுக்கு வெறுப்புணர்வைத் தூண்டும். பேரணி நடைபெறும் இடங்கள் கொரோனாத் தொற்றால் தனிமைப்படுத்தப்பட்ட இடங்கள் அல்ல. அதனால் பொலிஸார் தாக்கல் செய்த அடிப்படையற்ற விண்ணப்பத்தை நிராகரிக்க வேண்டும்" என்று சட்டத்தரணிகள் சமர்ப்பணத்தை முன்வைத்தனர்.

பொலிஸாரின் மனுவையும், இரு தரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த சாவகச்சேரி நீதிவான் பொலிஸாரின் தடை கோரும் மனுவை நிராகரித்து உத்தரவிட்டார்.

சுன்னாகம், அச்சுவேலி மற்றும் காங்கேசன்துறை பொலிஸார் தடை கோரித் தாக்கல் செய்த மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

மூத்த சட்டத்தரணி என்.சிறீகாந்தா தலைமையில் வி.திருக்குமரன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் நீதிமன்றில் தோன்றி, தடைகோரும் மனுவுக்கு எதிராக நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தனர்.

பொலிஸாரின் விண்ணப்பம், சட்டத்தரணிகளின் ஆலோசனைகளை ஆராய்ந்த மல்லாகம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்த ராஜா பொலிஸாரின் மனுக்களை நிராகரித்துக் கட்டளை வழங்கினார்.

யாழ்ப்பாணம் பொலிஸார் தடைகோரித் தாக்கல் செய்த மனுவை நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்று நிராகரித்தது. பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு ஒரு முக விளக்கத்தில் வழங்கிய கட்டளையை, பிரதிநிதிகள் முன்வைத்த ஆட்சேபனையை அடுத்து யாழ்ப்பாணம் நீதிமன்று தடையை நீக்கியுள்ளது.

யாழ்ப்பாணம் நீதிமன்றில் சட்டத்தரணிகள் வி.மணிவண்ணன், வி.திருக்குமாரன் ஆகியோர் முன்னிலையாகிக் கடும் ஆட்சேபத்தை முன்வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-26,159,111,9)

## மக்களுக்கு....

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பொதுமக்களுக்கு வயதின் அடிப்படையில் கொரோனாத் தடுப்பூசி வழங்குவதற்கான திட்டம் சுகாதார அமைச்சால் வகுக்கப்பட்டுள்ளது. நாம் வடக்கு மாகாணத்தில் பொதுமக்களின் வயது அடிப்படையிலான பட்டியலைத் தயாரித்து வைத்துள்ளோம்.

வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் உள்ள சுகாதார சேவையாளர்களுக்குக் கடந்த சனிக்கிழமை முதல் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. தடுப்பூசி ஏற்றுவதற்கு 9 ஆயிரத்து 944 பேர் தகுதி பெற்றிருந்த நிலையில் 85 சதவீதத்தினர் தடுப்பூசி ஏற்றிக்கொண்டுள்ளனர்.

பாலூட்டும் தாய்கள், கர்ப்பவதிகள் மற்றும் கர்ப்பம் தரிக்கக் காத்திருப்போர் தவிர்ந்த ஏனையோர் தடுப்பூசி ஏற்றிக் கொள்ள முடியும். இன்றும் தடுப்பூசிகள் ஏற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. என்றார். (எ-26)

## தாக்கப்பட்ட....

முதலாம் திகதி இவர் வீட்டில் இருந்து வெளியே சென்றுள்ளார். அதன்பின்னர் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் இவர் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 5 நாள்களாகச் சிகிச்சை பெற்று வந்த அவர், நேற்று அதிகாலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அதையடுத்து அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வைத்தியசாலைக்குச் சென்ற யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.பீற்றர்போல் விசாரணைகளை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறு உத்தரவிட்ட நீதவான், இறப்பு விசாரணைகள் 9ஆம் திகதி நீதிமன்றில் நடைபெறும் என்றும் தவணையிட்டுள்ளார். (எ-26)

## அத்தியாவசிய....

பந்துல குணவர்த்தன தெரிவித்தார். 27 அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என்றும், எதிர்வரும் 8ஆம் திகதி முதல் 3 மாதங்களுக்கு இந்த நிவாரண விலை வழங்கப்படவுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர், லங்கா சதொச, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் மற்றும் கியுஷொப் விற்பனையகங்கள் ஊடாக இந்த நிவாரண விலையில் பொருள்களை கொள்வனவு செய்ய முடியும் என்று தெரிவித்தார்.

சிவப்பு அரிசி 1 கிலோ: புதிய விலை 93 ரூபா தற்போதைய விலை 106 ரூபா
வெள்ளைப் பச்சரிசி 1 கிலோ : புதிய விலை 93 ரூபா தற்போதைய விலை 105 ரூபா
நாட்டரிசி 1 கிலோ: புதிய விலை 96 ரூபா தற்போதைய விலை 109 ரூபா
சம்பா 1 கிலோ: புதிய விலை 99 ரூபா தற்போதைய விலை 120 ரூபா
கீரி சம்பா 1 கிலோ: புதிய விலை 125 ரூபா தற்போதைய விலை 140 ரூபா
கோதுமை மா 1 கிலோ: புதிய விலை 84 ரூபா தற்போதைய விலை 105 ரூபா
வெள்ளைச் சீனி 1 கிலோ: புதிய விலை 99 ரூபா தற்போதைய விலை 110 ரூபா
சிவப்பு சீனி 1 கிலோ: புதிய விலை 125 ரூபா தற்போதைய விலை 140 ரூபா
தேயிலை 100 கிராம் : புதிய விலை 95 ரூபா தற்போதைய விலை 130 ரூபா.
பருப்பு ஆஸ்திரேலியா 1 கிலோ: புதிய விலை 165 ரூபா தற்போதைய விலை 188 ரூபா
பெரிய வெங்காயம் இந்தியா 1 கிலோ: புதிய விலை 120 ரூபா தற்போதைய விலை 140 ரூபா.
உருளைக்கிழங்கு உள்நாடு 1 கிலோ: புதிய விலை 180 ரூபா தற்போதைய விலை (216 220) ரூபா
காய்ந்த மிளகாய் 1 கிலோ: புதிய விலை 495 ரூபா தற்போதைய விலை 550 ரூபா
ரின் மீன் உள்நாடு 425 கிராம் : புதிய விலை 220 ரூபா் தற்போதைய விலை 240 ரூபா
ரின் மீன் இறக்குமதி 425 கிராம்: புதிய விலை 265 ரூபா தற்போதைய விலை 280 ரூபா
நெத்தலி தாய்லாந்து 1 கிலோ: புதிய விலை 545 ரூபா தற்போதைய விலை 700 ரூபா.
தோலுடன் கூடிய கோழி இறைச்சி 1 கிலோ: புதிய விலை 400 ரூபா தற்போதைய விலை 430 ரூபா
கட்டி உப்பு 1 கிலோ: புதிய விலை 43 ரூபா தற்போதைய விலை 55 ரூபா
பால்மா 400 கிராம் : புதிய விலை 355 ரூபா தற்போதைய விலை 380 ரூபா
சோயா எண்ணை 500 மில்லிலீற்றர் : புதிய விலை 310 ரூபா தற்போதைய விலை 470 ரூபா
சவர்க்காரம் 115 கிராம் : புதிய விலை 43 ரூபா தற்போதைய விலை 53 ரூபா
சவர்க்காரம் 650 கிராம் : புதிய விலை 260 ரூபா தற்போதைய விலை 325 ரூபா
வாசனை சவர்க்காரம் 100 கிராம் : புதிய விலை 56 ரூபா தற்போதைய விலை 63 ரூபா
கை சுத்திகரிப்பு (Hand sanitizer) 100 மில்லிலீற்றர் : புதிய விலை 250 ரூபா தற்போதைய விலை 350 ரூபா
முகக்கவசம் (SLS தரச் சான்றிதழுடன் கூடிய) : புதிய விலை 14 ரூபா தற்போதைய விலை 25 ரூபா (எ)

## பருத்தித்துறையில்...

பெறப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பருத்தித்துறை, நெல்லியடி மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பத்தின் அடிப்படையிலேயே இந்தத் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

பொதுத் தொல்லை ஏற்படுத்துதல், கொவிட்-19 சுகாதார நடைமுறைகளை மீறுதல் போன்ற சட்ட ஏற்பாடுகளின் கீழ் இந்த விண்ணப்பங்கள் பொலிஸாரால் தனித்தனியே மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

மூத்த சட்டத்தரணி என்.சிறிகாந்தா தலைமையில் சட்டத்தரணிகள் குகதாஸ், ஹசன் பாரூக், ரி.ஜனகன் ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகி இந்த மனுவுக்கு எதிராகக் கடும் ஆட்சேபனை தெரிவித்தனர்.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் காயத்திரி சைலவன், பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்றுத் தடை உத்தரவு வழங்கிக் கட்டளை வழங்கினார்.

பேரணியில் பங்கேற்பவர்கள் பல மாவட்டங்களில் இருந்தும் வருவதால் கொரோனாத் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் இந்தத் தடை உத்தரவு வழங்கப்படுகின்றது என்று நீதிவான் தனது கட்டளையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

(எ-26)

# ரூட், சிப்லி அசத்தலாட்டம்
# இங்கிலாந்து தற்காப்புநிலை

சென்னை, பெப். 6
இந்திய அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளான நேற்று ரூட் மற்றும் சிப்லியின் அபார ஆட்டத்தால் இங்கிலாந்து அணி தற்காப்பான நிலையில் உள்ளது.





நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக பேர்ண்ஸ் மற்றும் சிப்லி இருவரும் களமிறங்கினர். இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களைத் தாண்டியது இங்கிலாந்து அணி. அணி 63 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பேர்ண்ஸ். ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்தார் லோரன்ஸ். அவரை பும்ரா வீழ்த்தினார்.

ஒரு முனையில் நிலைத்துன்ற சிப்லியுடன் இணைந்தார் ரூட். இந்தியப் பந்துவீச்சை இந்த இணை நன்கு பதம் பார்த்தது. அரைச்சதம் கடந்தார் சிப்லி. ரூட்டும் அரைச்சதம் கடக்க இணைப்பாட்டம் 100 கடந்தது. சிப்லி அதிக நிதானத்தை வெளிப்படுத்தினாலும் ரூட் மறுமுனையில் சீரான சராசரியில் விளையாடிக் கொண்டிருந்தார். சதம் கடந்தார் ரூட். அணி 263 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 87 ஓட்டங்களுடன் பும்ராவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார் சிப்லி. நேற்றைய நாள் முடிவடைய வெறும் 3 பந்துகள் மீதமிருந்த நிலையில் பும்ரா இந்த இலக்கைச் சாய்த்தார். ரூட் மறுமுனையில் 128 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். (ம)

# பங்களாதேஷ் வலுவான நிலை

டாக்கா, பெப். 6
மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்களாதேஷ் அணி வலுவான நிலையில் உள்ளது. வெற்றிக்கான அத்திபாரத்தை அந்த அணி பலமாக அமைத்துள்ளது.

முதல் இன்னிங்ஸுக்காக பங்களாதேஸ் அணி 430 ஓட்டங்களைக் குவித்திருந்த நிலையில், பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அந்த அணி மூன்றாம் நாளான நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடி 259 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. 171 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய பங்களாதேஸ் அணி நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதுவரையாக நிலவரப்படி பங்களாதேஸ் அணி 218 ஓட்டங்கள் முன்னிலையுடன் உள்ளது. (ம)



ஒரு லட்சம் லீற்றர் தண்ணீர் விவகாரம்

# அடுத்த வாரத்தில் ஆராய்கிறது குழு

யாழ்ப்பாணம், பெப். 6
வலி. வடக்கில் தனியார் நிறுவனமொன்று அனுமதிக்கப்பட்ட அளவை விடவும் மிகக் கூடுதலான அளவு தண்ணீரை உறிஞ்சுகின்றது என்று அந்தப் பகுதி மக்களால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையில் இந்த விடயம் குறித்து ஆராய்வதற்காக குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு அடுத்த வாரத்தில் இந்த விடயம் தொடர்பில் கள ஆய்வுகளை நடத்தவுள்ளது.

அண்மையில் நடைபெற்ற வலி. வடக்கு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் மேற்படி விடயம் பூதாகரமாகியது. நீதிமன்றம் 30 ஆயிரம் லீற்றர் தண்ணீரை எடுப்பதற்கு அனுமதித்துள்ள நிலையில் அந்தத் தனியார் நிறுவனம் ஒரு லட்சம் லீற்றர் வரையில் தண்ணீரை உறிஞ்சுகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டது. இது தொடர்பில் மக்கள் கருத்துக்கள் பெறப்பட்டு உதயனில் செய்தியாக வெளியிடப்பட்டது. தற்போது இந்த விவகாரம் தொடர்பில் கள ஆய்வுகளையும் மேலதிக நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக பிரதேச சபை, பிரதேச செயலகம், நீர்வளச் சபை ஆகிய தரப்புக்களை உள்ளடக்கி தனிக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு அடுத்த வாரத்தில் கள ஆய்வுகளையும் மேலதிக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளது. (ம-319)

வடமாகாணத்தில்...

யாழ் மற்றும் வவுனியா நகரில் இளைஞர் யுவதிகளுக்கான சுயதொழில் கற்கைநெறிகள் ஆரம்பம்

**12.02.2021 முதல் புதிய பிரிவுகளுக்கான அனுமதிகள் தற்பொழுது நடைபெறுகின்றன...**

★ புதிய ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்பை எதிர்பார்த்து காத்திருப்பவர்கள் மற்றும் இலங்கையில் புதிதாக தொழில் ஒன்றை ஆரம்பிக்க இருப்பவர்களுக்கான அரிய சந்தர்ப்பம்.!
★ இது ஒரு சுய தொழில், மிக குறுகிய காலம், மிக சிறிய இடம், மிக சிறிய முதலீட்டில் செய்யக்கூடிய ஒரு தொழில்.
★ மாதம் ரூபா.150,000 இற்கு மேல் சம்பாதிக்கக் கூடிய ஒரு சுயதொழில் ஒன்றை கற்றுக் கொள்ள இன்றே இணைந்து கொள்ளுங்கள்.
★ உள்நாடு, வெளிநாடுகளில் அதிகமான வேலை வாய்ப்புக்களை பெற்றுத்தரக்கூடிய தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பம்..!

✓PROFESSIONAL CCTV TRAINING COURSE (Just 3 Days)
✓MOBILE PHONE REPAIRING COURSE (Just 4 Days)
✓COMPUTER HARDWARE & NETWORKING, CYBERCRIME COURSE (Just 3 Days)
✓HOUSE WIRING COURSE - ELECTRICAL (Just 5 Days)
✓வானொலி, தொலைகாட்சி அறிவிப்பாளர் பாடநெறி (King's RJ)

மேற்குறிப்பிட்ட அனைத்து கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்.

இம்மாதம் 12ம் திகதி முதல் அனைத்து வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

✓ பதிவுக் கட்டணம் 2500/-
✓ பாடநெறிக் கட்டணம் 15000/- மட்டுமே.
உடன் பதிவுகளுக்கு முந்துங்கள்.
யாழ் பதிவுகளுக்கு :- 0777 24 25 83 / 021 43 666 76
வவுனியா பதிவுகளுக்கு :- 0777 60 69 17 / 024 561 5610

ITA - INTERNATIONAL TECH ACADEMY
No.160, 2nd Cross Street, Jaffna.
TP: 021 43 666 76 / 0777 24 25 83

# கடற்றொழிலாளர்களுடன் இன்று அமைச்சர் பேச்சு!

யாழ்ப்பாணம், பெப். 6
கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சருக்கும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற வலி. வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பூதாகரமாகிய மயிலிட்டி துறைமுக விவகாரம் இன்று பேசுபொருளாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் வடமாகாண கடற்பரப்புகளில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ள தமிழக மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கை தொடர்பிலும் இன்று விரிவாக ஆலோசனை நடத்தப்படும் என்றும் நம்பகமான வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. (ம-319)

தேவை

ஸ்ரான்லி வீதியில் கடை வாடகைக்கு அல்லது விற்பனைக்கு இருந்தால் தொடர்புகொள்ளவும்.
T.P: 077 507 8272

ENGLISH ஆங்கிலம்

பிரத்தியேக வகுப்புகள்
உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
T.P: 0776589443 யாழ்ப்பாணம்

கட்டடம் வாடகைக்கு தேவை

கிளிநொச்சி நகரப் பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அலுவலக தேவைக்கு சிறிய கட்டடம் வாடகைக்குத் தேவை. (A9 வீதியுடன் அண்மையில் இருத்தல் விரும்பத்தக்கது)
077 9592 628

வெற்றித்தேர்வு வெளியீட்டகம் நடாத்தும்

புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும்
2021 - தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான
வெற்றித்தேர்வு தொடர் போட்டிப் பரீட்சைகள் ஆரம்பமாகின்றன.

பரீட்சை நாள் – ஞாயிற்றுக்கிழமை

பரீட்சை நிலையம் – நல்லூர் சயன்ஸ் அக்கடமி (முருகன் ஆலயம் முன்பாக)
பரீட்சை நேரங்கள் – காலை 6.00 - 8.15, காலை 8.30 - 10.45, காலை 11.00 - 1.15, மதியம் 1.30 - 3.45, மாலை 4.00 - 6.15
விரும்பிய நேரங்களில் பரீட்சைகள் எழுதலாம்
தரம் 4, தரம் 5 முதலாவது பரீட்சை 07.02.2021 , தரம் 3 முதலாவது பரீட்சை 14.02.2021

பரீட்சைப் பெறுபேறுகள் தரப்படுத்தலுடன் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்படும்.
புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் வெற்றித்தேர்வு வெற்றியாளர்களாக கௌரவிக்கப்படுவர்.

"வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு"

வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் பிரபல நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கின்றன.

- **வரவேற்பாளர் (Receptionist) பகல், இரவு**
- **ஒப்பு நோக்குநர் (Proof Reader) இரவு**
- **விளம்பர வடிவமைப்பாளர் (Graphic Designer) இரவு**

மேற்படி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் இன்று (06.02.2021) சனிக்கிழமை காலை 09.00- 12.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம்தரவும்.
முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

உதயன்
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.